பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 24 வெள்ளிக்கிழமை (07-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:194

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் திருத்தங்கள் செய்ய அரசு முயற்சி

## மாணவர் தின நிகழ்வில் கரிகாலன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜூன்7

**அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையே யான புரிந்துணர்வு உடன்பாட்டின் இலக்கை அடைய நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின் றோம். ஆனால் இந்த உடன்பாட்டில் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்கின்றது. - இப்படிக் குற்றஞ்சாட்டியுள்ளார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர் க.கரிகால்ன்.**

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி தம்பிலுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து பேசுகை யிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டத்தில் நேற்று இடம்பெற்ற மாண வர் தினப்பேரணிகள், பொதுக் கூட்டங் களில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் எழுச்சி தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு!

### ஆயிரக்கணக்கில் மாணவர் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன்7

தமிழீழ மாணவர் எழுச்சி தின நிகழ்வுகள் நேற்று யாழ்.குடா நாட் டில் பல பகுதிகளிலும் உணர்ச்சிபூர் வமாக இடம்பெற்றன.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் காலை 9 மணி முதல் விசேட நிகழ்வுகள் இடம்பெற் றன.

ஈகச்சுடரேற்றல், அகவணக்கம், தமி ழீழத் தேசிய கொடியேற்றல் மற்றும் விசேட உரைகளுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன. எழுச்சிநாள் பிரகடன மும் வாசித்து வெளியிடப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்கள் இந்த நிகழ்வு களில் கலந்துகொண்டு விசேட உரை யாற்றினர்.

உரும்பிராயில் உள்ள பொன். சிவ குமாரனின் சிலைக்கு அஞ்சலி செலுத் தும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாணவர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையானவர்கள் இதில் பங்குபற்றினர்.

நேற்றிரவு அங்கு விசேட நிகழ்ச்சி களும், விசேட உரைகளும் இடம்பெற் றன.

பொன்சிவகுமாரனின் படம் பொறிக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிவாவின் பூதவுடலுக்கு இன்று கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலி

### விடுதலைப் புலிகள் விரிவான ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்7

மூத்த அரசியல் தலைவரும் தமி ழர் விடுதலைக் கூட்டணியின் தலை வருமான அமரர் எம்.சிவசிதம்பரத்தின புகழுடல் கொழும்பில் இருந்து இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட விருக்கிறது.

கிளிநொச்சியில் அன்னாரின் புகழு டலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் செய்துள்ளனர்.

இன்று அதிகாலை 2 மணிக்கு கொழும்பில் இருந்து வாகனத் தொடர் அணியாக எடுத்துவரப்படும் புகழு டலை ஈரற்பெரியகுளத்தில் வைத்து தமிழ்க் கூட்டமைப்பின் வவுனியா கிளைப் பிரமுகர்கள் பொறுப்பேற்பர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் முற்பகல் 11மணிவரை புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டி ருக்கும். அங்கு தமிழ்க் கூட்டமைப்பு பிரமுகர்களும், விடுதலைப் புலிகளின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் நேற்று சிவாவுக்கு இறுதி அஞ்சலி

கொழும்பு,ஜூன்7

மூத்த அரசியல் தலைவர் எம். சிவசிதம்பரத்தின் பூதவுடலுக்கு பிரத மர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் நேற்று மாலை அஞ்சலி செலுத்தினர்.

திம்பிரிகஸ்யாயவில் உள்ள அன் னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அமரரின் புகழுடலுக்கு பெரும் எண் ணிக்கையான பொதுமக்கள் அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களான ஜி.எல்பீரிஸ், டிரோன் பெர்னாண்டோ, ஜோன் அமரதுங்க, கருஜெயசூரிய, மஹிந்த ராஜபக்ஷ, ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் சகிதம்சென்று அஞ்சலி செலுத்தினார்.

எதிர்க்கட்சியினர் சார்பில் முன் னாள் அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான உறுப்பினர்களும், இடதுசாரித் தலைவர்களான ராஜா கொலுரே, அத்தாவுட செனவிரத்ன ஆகியோரும் நேரில சென்று அஞ்சலி செலுத்தினர்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் கடைகளை மூடி சிவாவுக்கு அஞ்சலி செலுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்7

முதுபெரும் அரசியல் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பூதவுட லுக்கு யாழ்.குடாநாட்டு மக்கள் அஞ் சலி செலுத்துவதற்கு வசதியாக நாளையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழ மையும் சகல வர்த்தக நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் என்பனவற்றை மூடியும் வீடுகள், கட்டடங்களில் கறுப்புக் கொடி களைப் பறக்கவிட்டும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் தலைவர்களில் ஒருவருமான மாவை சோ.சேனாதிராசா மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

யாழ்நகரப் பகுதியிலிருந்து நாளை சனிக்கிழமை புறப்படும் அமரர் சிவா வின் இறுதி ஊர்வலம் காங்கேசன் துறை வீதியூடாகக் கொக்குவில் சந் தியை அடைந்து அங்கிருந்து ஆடிய

(14ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை தமிழ்ப் பகுதிகளில் வெள்ளைக் கொடிகள்

காரைதீவு,ஜூன்7

தமிழர் விடுதலைக் கூட்டணி தலை வர் மு.சிவசிதம்பரம் மறைவுக்கு அம் பாறை மாவட்டத்தில் துக்கம் அனுஷ் டிக்கப்படுகிறது. தமிழ்ப் பிரதேசங் கள் எங்கும் வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கின்றன.

மறைந்த தலைவருக்கு நேரில் இறுதியஞ்சலி செலுத்த கூட்டணி முக்கியப் பிரமுகர்கள் பலர் கொழும் புக்குச் சென்றுள்ளனர்.

அன்னாரின் மறைவையிட்டு மாவட் டத்திலிருந்து அனுதாபச் செய்திகள் பல பொதுநல நிறுவனங்களாலும் அனுப்பப்பட்டு வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அவரது மறைவு குறித்து பொது அமைப்புக் கள் இரங்கல் தெரிவித்துள்ளன. (ம)

### கண்காணிப்பு குழுத் தலைவர் வன்னி செல்கிறார்

கொழும்பு,ஜூன்7

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு வின் தலைவரான ஜெனரல் ரொன்ட் புருகோவிட் இன்று கிளிநொச்சிக்குச் செல்வார். அங்கு அவர் புலிகளின் அரசியல்துறை தலைவர்களைச் சந்தித் துப் பேசுவார்.

தீவுப் பகுதிக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள தாங் கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை தொடர்பான முடக்க நிலையைத் தீர்ப்பது குறித்து ஆராய்வதே அவரது இப்பயணத் தின் முக்கிய நோக்கமாகும். (ம)

## மீனவர்களின் மறியற் போராட்டத்தால் செயலகம், பிரதேச செயலகம் ஸ்தம்பிதம்!

### இன்றும் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்7

குடாநாட்டில் சுதந்திரமாக மீன்பிடித் தொழில் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் -

கரையோரங்களில் மீனவர் குடி யிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்றும் கோரி யாழ்.குடாநாட்டு மீனவர்கள் யாழ். செயலகம் மற்றும் யாழ்.பிரதேச செய லகம் ஆகியவற்றின் முன்பாக நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் செயலகம் மற்றும் பிரதேச செயலகப் பணிகள் யாவும் ஸ்தம்பித் தன.

காலை 7 மணிக்கு அங்கு கூடிய ஐந்நூறுக்கும் அதிகமான மீனவர்கள் இரு அலுவலகங்களின் நுழைவாயில் களிலும் அமர்ந்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பல்வேறு சுலோகங்கள் அடங்கிய அட்டைகளையும் பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி கள் அங்கு சென்று மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.

மீனவர் பிரச்சினை தொடர்பாக கொழும்பில் பேச்சுக்கள் இடம்பெறு கின்றன என்று அவர்கள் சங்கப்பிரதி நிதிகளிடம் தெரிவித்தனர். பேச்சுக் களின் பலாபலனை அவர்களுக்குத தெரியப்படுத்துவதாகவும் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### போரினால் எமது மக்கள் நலிந்தது போதும்

# புரிந்துணர்வு உடன்படிக்கையை கடைசிவரை காப்பாற்றுவோம்

## பல்கலை. நிகழ்வில் பாப்பா உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன்7

'புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு எம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி அதனைக் கடைசிவரைக் காப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம்!'

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பிரமுகர் பாப்பா.

நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற 'தமிழீழ மாணவர் எழுச்சி நாள்' நிகழ்வில் கலந்துகொண்டு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் பாப்பா உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கே.பரணிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் கூறியதாவது:-

'தற்போது அமுலில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் தேசிய தலைவர் கைச்சாத்திட்டுள்ளார். அது மட்டுமின்றி எமது மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வந்த துன்பங்களிற்கெல்லாம் ஓர் ஓய்வு கொடுப்பது போன்று இச்சூழல் அமைந்துள்ளது.

'புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமெங்கும் பகிரங்கமாக நடமாடத் தொடங்கியுள்ள இந் நிலையில் இந்த ஒப்பந்தம் திடீரென முறிந்துவிடுமோ?, அடுத்து என்ன நடக்குமோ? என்று மக்கள் மத்தியில் அச்சநிலை ஒன்று உருவாகியுள்ளது.

'எம்மைப் பொறுத்தவரை எமது மக்களின் நன்மைகருதி இறுதிவரை இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்போம்.

'எனினும் இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காகக் கூட நாம் போராட வேண்டிய நிலையே தற்போது காணப்படுகிறது. அதற்காகவே மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது.

"விடுதலைப் புலிகளின் தடையை நீக்கிப் பேசுவோம், இடைக்கால நிர்வாக சபையை அவர்களிடம் ஒப்படைப்போம்" என்றெல்லாம் கூறிக்கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்க இப்போது என்ன சொல்கிறார்? விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இவை ஒன்றும் புதியவை அல்ல.

"கடந்த காலங்களே எதிர்காலங்களாகும்"என்று கூறுவார்கள். அந்த வகையில்தான் எமது போராட்டம் நகர்ந்து கொண்டு செல்கிறது.

'தற்போதைய அரசின் நடவடிக்கைகள் காரணமாக வெறுப்படையும் யாழ்மக்கள் அதற்கெதிராகக் கிளர்ந்து எழும் நாள் விரைவில் ஏற்படலாம். ஆனால் மக்கள் கிளர்ந்தெழாத வண்ணம் அரசு நல்லெண்ணத்துடன் செயற்படுமானால் அது வரவேற்கத்தக்க விடயமே!

'உதயன்' பத்திரிகையில் கூட "பாலா" அண்ணா என்ன சொல்லியிருக்கிறார்? எமது போராட்டம் குறித்த நியாயத் தன்மையைக் கூட பெரும்பான்மை இனத்தவர்களால் இன்னமும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்நிலையில் நாம் எப்போதும் விழிப்புடனும் அவதானமாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'சயனைட்'டை அறிமுகப்படுத்தியவர் சிவகுமாரன். இந்தியப் படையை நாம் எதிர்க்க வேண்டிய தேவை ஏற்பட்ட இக்கட்டான சந்தர்ப்பத்தின் போது எமது மக்கள் போராட்டத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பானது எம்மை திகைக்க வைத்தது.

'அப்போது எம்மிடம் சுமார் 2 ஆயிரம் போராளிகள் இருந்தார்கள். தரையிறங்கியிருந்த 35 ஆயிரத்திற்கும் அதிகமான இந்தியத் துருப்பினரை நாம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

'அத்தகைய சூழ்நிலையில் ஒரு நாள், தலைவர் எம்மை அழைத்தார். "இந்த யுத்தத்தின்போது நாம் 'கூண்டோடு' அழிய நேரிடலாம். அவ்வாறு அழிய வேண்டியேற்படலாம் என்பதற்காக போராட்டத்தை கைவிடமுடியாது. நாம் அழிந்தால் எமது எதிர்காலச் சந்ததி அதனை வரலாறாகப் படிக்கட்டும். இந்த யுத்தத்தில் யாரும் எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது. போரிட்டோ அல்லது 'சயனைட்' உட்கொண்டோ வீரமரணமடைய வேண்டும். இதற்கு உடன்பாடில்லாதவர்கள் இயக்கத்தை விட்டு விலகலாம்" என்று எமக்கு அறிவுறுத்தினார் தலைவர்.

'இந்தியப் படையுடன் நாம் மோதிய திறமை குறித்து இந்திய இராணுவ அதிகாரிகள் பலரும் நூலாக எழுதியுள்ளார்கள். அப்போதைய இந்தியத் தூதுவர் தீட்சித் எழுதிய நூலில், "புலிகள் எப்போது, என்ன முடிவெடுப்பார்கள் என்று யாரும் மதிப்பிட்டு விடமுடியாது. ஆனால் அது தீர்க்க தரிசனம் நிறைந்த சரியான முடிவாகவே இருக்கும்" என்று எழுதியுள்ளார். புலிகள் எப்போதும் சரியான முடிவை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் எமது மக்களும் உள்ளார்கள்' இவ்வாறு பாப்பா கூறினார்.

எழுச்சிதின நிகழ்வின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக முன்றிலில் புலிக்கொடியை பாப்பா ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. 'தமிழீழ மாணவர் எழுச்சிப் பிரகடனமும்' வெளியிடப்பட்டது.

நிகழ்வின இறுதியில் கலை பண்பாட்டுக் கழகத்தின் 'விடுதலைப் பறவைகள்' வழங்கிய புதுவை அன்பனின் 'கரைதேடும் ஓடங்கள்' நாடகம் இடம்பெற்றது. (ஒ-9)

## மர்மப் பொருளுடன் விளையாடிய சிறுவன் அது வெடித்துக் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

அநாதரவாகக் கிடந்த மர்மப் பொருளை தூக்கி வீசிய போது அது வெடித்துச் சிதறியதால் சிறுவன் ஒருவன் காலில் காயமடைந்தான்.

கரவெட்டி கிழக்கில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரகாஸ் (வயது-13) என்ற சிறுவனே காயமடைந்தான்.

நீல நிறத்தில் மூடியைப் போன்று கிடந்த பொருளை தான் தூக்கி வீசிய சமயம் அது வெடித்துச் சிதறியதாக சிறுவன் தெரிவித்தான்.

காயமடைந்த சிறுவன் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (ம-6)

## கொழும்புக்கு நாளை விசேட விமான சேவை

யாழ்ப்பாணம்,ஜூன்7

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் நாளை சனிக்கிழமை விசேட விமான சேவை ஒன்று இடம்பெறவுள்ளது என்று எக்ஸ்போ விமான சேவையின் யாழ்.முகவர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த விசேட சேவைக்கான பயணச்சீட்டுக்களை இன்று பெறலாம் என்றும் -

நாளைய முதலாவது சேவைக்கு பயணச்சீட்டுப் பெற்றவர்கள் காலை 7 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகம் அளிக்க வேண்டும் என்றும் -

விசேட சேவைக்கு பயணச்சீட்டுப் பெற்றவர்கள் முற்பகல் 11.30மணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் -

முகவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## படைத்தரப்பு மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்7

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கட்டடங்களில் இருந்து படையினர் உடனடியாக வெளியேறமாட்டார்கள் என்று யாழ்.மாவட்ட படைத் தளபதி, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவித்திருப்பதாக 'தமிழ்நெற்' இணையத்தளத்தை மேற்கோள்காட்டி கடந்த 4 ஆம் திகதி 'உதயனில்' வெளியான செய்தியை படையினர் மறுத்துள்ளனர்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல் தவறானது என்று யாழ்.மாவட்ட படைத் தலைமையகத்தின் தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

தகவல் பிரிவின் சார்பில் கப்டன் ஏ.எச்.பி.ஜே.சில்வா விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1. 2002-06-04 ஆம் திகதி தங்களது பத்திரிகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கட்டடங்களில் இருந்து படையினர் உடனடியாக வெளியேற மாட்டார்கள் என்று யாழ்.மாவட்ட படைத்தளபதி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவித்திருப்பதாக 'தமிழ்நெற்' இணையத் தளம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

2. மேற்குறிப்பிடப்பட்ட செய்தி பொய்யானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அந்தப் பாடசாலையில் ஒரு கட்டடப் பிரிவில் (சிறிய பிரிவில்) இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதுடன் அந்தப் பிரிவில் இருந்தும் வெளியேறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் அறியத்தருகின்றேன்.

3. 'தமிழ் நெற்' இணையத்தளம் ஊடாக வெளியாகிய செய்தி உண்மைக்கு மாறானவை என்பதுடன், அந்த தவறான செய்தியை தங்களது பத்திரிகையிலும் பிரசுரித்துள்ளீர்கள். அந்த செய்தி பொய்யானது என்பதுடன், இக்கடிதத்தின் 2 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட செய்தியை தங்களது பத்திரிகையில் பிரசுரிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். - என்று [illegible]ட்டுள்ளது. (ஐ)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூன்7

குடாநாட்டில் பனை தென்னை வளங்கள் அழிக்கப்படுவதை தடுப்பது தொடர்பான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழு உறுப்பினர்கள், தலைவர்கள், பொதுமுகாமையாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளும்படி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின சமாசம் கேட்டுள்ளது. (ஒ-13)

## சாரணர் தலைவர்களுக்கு!

நாளை 8ஆம் திகதியில் இருந்து 16ஆம் திகதிவரை நடைபெறவுள்ள சாரணர் சேவை வாரத்திற்கான பணி நிரப்பு அட்டைகளை சாரணர் தலைவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அட்டைகள் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இருந்து நேற்று இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் சாரணத் தலைவர்கள் உதவி மாவட்ட ஆணையாளர் எஸ். ஏகாம்பரநாதனிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஒ-6)






பிரான்ஸ் வீரர் லிலியன் துராமின் கால்களுக்கிடையில் புகுந்து பந்தை உதைக்கும் உருகுவே வீரர் அல்வாரே ரொக்கோபா.

## சவூதி அரேபியா அணிக்கு நேற்று 2 ஆவது தோல்வி!

சியோல்,ஜூன்7

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று சவூதி அரேபியாவுக்கு எதிரான ஆட்டத்தில் கெமரூன் அணி வெற்றிபெற்றது. இதன் மூலம் இந்தப் போட்டித் தொடரின் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறாத முதலாவது அணியாகியுள்ளது சவூதி அரேபியா. பிரான்ஸ் - உருகுவே அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஆட்டமும் டென்மார்க் - செனகல் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஆட்டமும் வெற்றிதோல்வியின்றி முடிந்தன.

முதலாவது ஆட்டம் டென்மார்க் மற்றும் செனகல் அணிகளுக்கு இடையில் நடைபெற்றது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமநிலையில் முடித்துக்கொண்டன.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் ஆடின. ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் டென்மார்க் அணிக்கு கிடைத்த பெனால்டி உதையை சரியாகப் பயன்படுத்திய அந்த அணி வீரர் ஜோன் டால் தொம்ஸன் ஒரு கோலை அடித்தார். 52ஆவது நிமிடத்தில் செனகல் அணி வீரர் சலிவ் டியாலூவின் மிக நேர்த்தியான உதை அவருக்கு ஒரு கோலைப் பெற்றுத்தந்தது. இதனால் இரு அணிகளும் சமநிலையடைந்தன. அந்த கோல் உலகக் கிண்ண போட்டிகளில் டியாலூ அடித்த 50ஆவது கோலாகும். இறுதியில் ஆட்டம் 1-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இரண்டாவது ஆட்டம் ஆபிரிக்க சம்பியன் அணியான கெமரூனுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் இடம்பெற்ற[illegible]. கெமரூன் அணி ஒரு கோல் அடி[illegible] வென்றது. தான் விளையாடிய இரு ஆட்டங்களிலும் தோல்வியுற்றதன் மூலம் அடுத்த சுற்றுக்குப் போகும் தகுதியை சவூதி இழந்தது.

ஆட்டத்தின் முன் பாதியில் கெமருன அணிக்கு கோல் அடிப்பதற்கான இரு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால அந்த அணி வீரர்கள் பற்றிக் மூமா, லோரன் ஆகியோர் தவறவிட்டனர். ஆட்டத்தின் பின் பாதியில் கெமரூன் அணி வீரர் சமூவல் எடோ தன் அணிக்காக ஒரு கோலை அடித்தார். இந்த ஆட்டத்தில் சவூதி அணி வீரர்கள் சிறப்பாக விளையாடிய போதும், கோல அடிப்பதற்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை அவர்கள் தவறவிட்டனர்.

மூன்றாவது ஆட்டம் மிக முக்கியமான பிரான்ஸ் மற்றும் உருகுவே அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது. இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்காது ஆட்டத்தை வெற்றிதோல்வியின்றி முடித்தன. காயம் காரணமாக முதலாவது ஆட்டத்தில் விளையாடாத பிரான்ஸின் முன்னணி வீரர் ஸிடானும் இந்த ஆட்டத்தில் விளையாடினார்.

ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் முறைகேடாக ஆடினார் என்பதற்காக பிரான்ஸ் வீரர் ஹென்றி நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் ஆட்டத்தின் மிகுதி நேரத்தில் 10 வீரர்களுடனேயே ஆட வேண்டிய கட்டாயம் பிரான்ஸ் அணிக்கு ஏற்பட்டது. இது பிரான்ஸ் அணி வீரர்கள் முன்னேறிச் சென்று தாக்குதல் ஆட்டம் நடத்துவதற்குப் பதில் தற்காப்பு ஆட்டத்தில் கூடிய கவனம் செலுத்தும் நிலைக்கு அவர்களைத் தள்ளியது. எனினும் இறுதியில் இரு அணிகளும் எந்த கோலையும் அடிக்காமல் ஆட்டத்தை சமநிலையில் முடித்துக்கொண்டன.



டென்மார்க் மற்றும் செனகல் அணி வீரர்களுக்கிடையிலான பலப்பரீட்சை.



வெளியேற்றப்பட்ட பிரான்ஸ் வீரர்.

### இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்7

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம் (உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ சுவீடன் எதிர் நைஜீரியா (ஜப்பான் - பகல் 12.30)

★ ஸ்பெயின் எதிர் பரகுவே (கொரியா - பகல் 3.00)

★ ஆர்ஜென்ரீனா எதிர் இங்கிலாந்து (ஜப்பான் - மாலை 5.30)

# தாய் மண்ணில் தமிழீழ மாணவர் எழுச்சி





நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் இராஜகோபால் ஈகச் சுடரேற்றுவதையும், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் பிரிவைச் சேர்ந்த தமிழ்விழி தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதையும் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் குருதர்ஷன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.



நேற்றைய மாணவர் எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளைப் படங்களில் காணலாம்.

# கடலன்னை மடியில் தவழக் கட்டுப்பாடா?






யாழ்.செயலகம் முன்பாக மீனவர்கள் நேற்று நடத்திய மறியற்போரில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நடுவில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் மறியற் போரில் கலந்துகொண்ட மீன்வர்களை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள் : தேவராஜன்)

# கிழக்கிலும் மாணவர் எழுச்சி

கொழும்பு,ஜூன்7

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் மாணவர் எழுச்சிப் பேரணியும், எழுச்சி மாநாடும் கிழக்கு பல்கலைக்கழக மாணவ அவைத் தலைவர் எஸ்.விருத்தாசலம் தலைமையில் நடைபெற்றன.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி, அரசடி மணிக்கூட்டுக்கோபுரம், தாண்டவன்வெளி ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமான ஊர்வலங்கள் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியை வந்தடைந்தன.

அங்கு எழுச்சி மாநாடு நடைபெற்றது.

"தமிழ்க் கூலிப்படைகளே எடுத்த பிச்சை போதாதா?", "தமிழ்த் துரோகிகளே நீங்களும் தமிழர்கள்தானே", "ஸ்ரீலங்கா இராணுவமே, மர நிழலில் நாங்கள்; எங்கள் பாடசாலைகளில் நங்களா?" என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். எழுச்சி மாநாட்டில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் உரையாற்றினர். விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கா.துரை உரையாற்றினார்.

அவர் அங்கு கூறியதாவது:-

"எமது கல்வியை மேம்படுத்த வேண்டும். இதற்கு எங்கள் தேசியத் தலைவர் பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டியுள்ளார். 17ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்தனர். அவர்கள் போராட்டத்தில் இணைந்தவர்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# வீடியோ எடுத்த பொலீஸாருக்கு மாணவர்கள் காட்டிய எதிர்ப்பு!

## மத்திய கல்லூரி மைதானத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகளை பொலீஸார் வீடியோ படம் பிடித்தனர். இதற்கு மாணவர்கள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வுகள் ஆரம்பித்த சிறிது நேரத்தில் அங்கு வந்த பொலீஸார், திரண்டிருந்த மாணவரையும், நிகழ்வுகளையும் வீடியோப் படம் பிடிக்க முற்பட்டனர். எனினும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் பொலீஸார் அவ்வாறு வீடியோ படம் எடுப்பதில் தமக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்ததை அடுத்து பொலீஸார் அங்கிருந்து நகர்ந்தனர்.

ஆயினும் மைதானத்தின் அருகில் அமைக்கப்பட்டிருந்த தமது காப்பரண் ஒன்றிலிருந்தபடி மீண்டும் நிகழ்வுகளைப் பொலீஸார் வீடியோப் படம் எடுத்ததாகக் கூறப்படுகிறது.

இதனைக் கவனித்த மாணவர்கள் வீடியோப் படம் பிடிக்கப்படுவதற்கு தமது எதிர்ப்பை எழுந்து நின்று வெளிக்காட்டினர்.

அந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த தமிழ்விழி மாணவர்களை அமைதியாக இருக்கும்படி கோரினார்.

அதனை ஏற்றுக்கொண்ட மாணவர்கள் அமைதி காத்து அமர்ந்தனர். பின்னர் நிகழ்ச்சிகள் சுமுகமாகத் தொடர்ந்து நடந்தன.

(எ-8-12)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள் ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார்வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், **535A,** பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

## விற்பனைக்கு

தரமான புறொயிலர் பேட்டுக் குஞ் சுக்கான பிறிமா, பகிறா, செலான் பண்ணைகளின் கோழிக்குஞ்சுகளைப் பதிவுகள் செய்து பெற்றுக்கொள்ள லாம். நிதானமரன விலைகளிலும் தர மான குஞ்சுகளை வான் தரைமார்க் கமாகத் தொடர்ந்து குறைந்த விலை களில் வழங்கி வருகின்றோம். தொடர்பு: தம்பிப்பிள்ளையும் மைந்தரும், No.343, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.3353. (4532)

நல்ல நிலையிலுள்ள C.G.125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் - சனி, ஞாயிறு 3.00 - 6.00 தொடர்பு: செ. ஞானமுத்து, அராலி மத்தி, ஞானி யார் கோயிலடி. (4556)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கில் ஞானபண் டித வித்தியாசாலைக்கு அருகாக 5 பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கனகரெத்தினம், கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (4548)

## மணமகள் தேவை

1965ஆம் ஆண்டு பிறந்த அரச வங்கி முகாமையாளராக கடமையாற றும் மணமகனுக்கு தகுந்த மணப் பெண் தேவை. தொடர்பு: விள. இல. 1533, மே/பா உதயன். (4561)

1975ஆம் ஆண்டு பிறந்த பட்ட தாரி ஆசிரியருக்கு படித்த, அழகான், பண்பான மணமகளை எதிர்பார்க் கின்றனர். தொடர்பு: விள.இல.1532 மே/பா உதயன். (4560)

## தவறிவிட்டது

இராச வீதி, கரந்தன் சந்தி, நீர் வேலியைச் சேர்ந்த சின்னத்துரை ஞானேந்திரன் என்பவருடைய தே.அ. அட்டை (இல.460962625V), வி.அ.அ. என்பன நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத் திற்கும் இடையில் பையுடன் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (4544)

24சிறி7176 என்னும் இலக்க லொறிப் புத்தகம் (03.06.2002) திங்கட் கிழமை புன்னாலைக்கட்டுவன் சந்திக் கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்த வர்கள் இளையதம்பி, கல்உடைக்கும் தொழிற்சாலை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரி யில் தயவு செய்து ஒப்படைக்கவும். (4535)

29-05-2002 புதன்கிழமை அன்று 750ஆம் இலக்க கச்சேரி ஊடான பஸ்ஸில் சிம்ரனின் அட்டைப் படம் போட்ட மிகவும் முக்கியமான கணக் கியல் கொப்பி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மிக விரைவில் **Sunlight** தொலைத் தொடர்பகம், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம **(T.P 021-2741)** எனும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (4552)

## வகுப்புகள்

ஆண்டு 11இற்கான விசேட மாலை வகுப்புகள் ஆரம்பமாகியுள் ளன. ஆங்கிலம், கணிதம், தமிழ், விஞ்ஞானம், வர்த்தகம் தனித்தனிக் கவனத்துடன் சிறிய குழுவாகக் கற் பிக்கப்படுகிறது. 426 (302), காங்கேசன துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் கோயில் அருகில்). (4501)

**Maths** புதிய, பழைய பாடத் திட்டத்தில் O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடைய தரம் 8,9,10 உட்பட கற்பிக்கப்படும். அனுபவம் மிகுந்த ஆசிரியர். 85, சிவன் கோயிலடி, சிவன கோயில் பின்புறம், திருநெல்வேலி. (4557)

## வீடு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வைத்தியர் குடும்பத்தவர்க்கு வாட கைக்கு வீடு தேவை. தொடர்பு: இல. 07, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (4536)

## 'அசிட்' வீச்சு குற்றச்சாட்டில் ஜே.வி.பியினர் கைது!

கொழும்பு,ஜூன்7

மத்திய மாகாண கல்வித் திணைக் கள கணக்காளர் நாயகத்திற்கு 'அசிட்' வீசிய குற்றச்சாட்டின் பேரில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் 13 பேர் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைது செயயப்பட்டனர்.

'அசிட்' வீச்சு சம்பவத்தில் சம்பந் தப்பட்டதாகக் கூறப்படும் 3ஓட்டோக் களையும் பொலீஸார் கைப்பற்றியுள் ளனர். (ஒ-4)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பு

மனித உரிமைகள் ஆணைக்குழு வின் செயற்பாடுகள் குறித்து மறுபரி சீலனை செய்வதற்கு நாடாளுமன்றக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் அரசு மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின் றனர். (ஒ-4-ரி)

## ஊனமுற்ற படையினர் கோரிக்கை

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசு தீவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஊனமுற்ற படையினர் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.இது தொடர்பான மனு ஒன்றினை சங்கப் பிரதிநிதிகள் பிரத மரின் செயலாளரிடம் நேற்றுமுன்தினம கையளித்தனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையை பயன்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதா னத்தை ஏற்படுத்த அரசு அக்கறை யுடன் செயறபடவேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஒ-4)




# எக்ஸ்போ விமான சேவை

## யாழ். - கொழும்பு

எக்ஸ்போ ஏவியேஸன் விமான சேவை ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

தற்போது சௌகரியமான பயணத்துக்கு

- 50 நிமிடங்களில் யாழ்ப்பாணம்.
- தினசரி சேவை இரத்மலானையிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும்.
- வசதியான புறப்படும்/தரையிறங்கும் நேரங்கள்.
- பயண வகுப்புக்கள் உங்கள் தெரிவுக்கேற்ப.
- தோழமையான அநுபவமுள்ள விமானச் சேவை குழுவினரின் பராமரிப்பில்.



பயணப் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்:

**எக்ஸ்போ விமான சேவை**

மகாலட்சுமி கட்டட மேல்மாடி,

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கங்கள்: 021 - 3564/2024

(C/22424)

# EXECUTIVE WANTED

If you can shoulder the challenge, we have a vacancy....

We are an agency for a global organisation. We are associated with air express, travel and tours and freight business. We have an opening for a dynamic male to manage the overall functions of our office situated in the heart of the Jaffna town.

The ideal candidate should be an ambitious go-getter with high personal motivation and talent. He should be able to achieve assigned sales targets, cost controls as well as attend to the administrative matters. Ability to communicate excellently in English and good public relations skills is essential, Field sales experience in a freight forwarding (exports) or an air express company will be a definite advantage. You should also meet the following requirements:-

*Age:* 24-30 years

*Professional Qualifications:* A degree or part qualification from a recognised institution.

*Pre requisites:* Strong PC Skills

Ability to adopt a protective approach, task & goal oriented with the commitment to quality and meeting tight deadlines.

The chosen candidate could look forward to attractive earnings. Salary negotiable.

We invite interested candidates to forward their personal profiles/CV's with the names of two non related referees, together with a passport size photograph within 10 days of this advertisement to the address below.

All applications will be treated in strict confidence and our correspondence will be restricted to the candidates called for interviews. Canvassing will cause disqualification.

Address:

**Cosmos Margating Services**

200, K.K.S. Road, Jaffna.

(C/22415)


## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை கணிதநெறி இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த **விதுபாகரனின்** அன்புத்தந்தை

**க.யோகராசா**

அவர்கள் 05.06.2002 புதன்கிழமை இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**மாணவர் ஒன்றியம்,**
**பலாலி ஆசிரிய கலாசாலை.**

(4565)

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர்

**திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம்**

அவர்களின் அன்புச் சகோதரர்

**சோமசுந்தரம் அருணகிரிநாதன்**

*(உரிமையாளர், சக்தி பார்மஸி, சுன்னாகம்)*

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறை கழலை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தேசிய கல்வி நிறுவக,**
**யாழ்.இந்துக் கல்லூரி நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர்கள்.**

(4539)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28
11
1928



மறைவு
08
05
2002

**அமரர் கே.வி.இராசரத்தினம்** *(நடமாடி)*

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - இலங்கைப் பொலீஸ் திணைக்களம்)

*கலைபயில் அரங்கமேறிக் கவினுற 'நடமுமாடி'*
*நிலை புகழ் மனிதனென்னும் நிகரிலாப் பேறு பெற்றே!*
*'வினைநயம்' காட்டி வென்ற வியத்தகு கலைஞ! உன்னை*
*நினைவினில் நிறுத்தி எங்கள் நெஞ்சினால் அஞ்சலித்தோம்.*

இன்று (07.06.2002) வெள்ளிக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையும் அந்தியேட்டிக்கிரியைகளும் கனடா - ரொறொன்ரோவில் நடை பெறும்.

*53, மல்வம் குறுக்குவீதி,*
*உடுவில்.*

*தங்கள் பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

(4568)

உதயன்

## வெற்றிக்கு வழி

அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் என்ன நினைக்கிறார்கள்? அதைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்திவிட்டார்.

லண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் கார்டியன்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு அவர் அளிதத பேட்டியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் அளித்த வாக்குறுதியில் இருந்து பின்வாங்குகின்றார் என்றும் - அது மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றது என்றும் - பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவும், சமாதானம் மலரவும் வழிசெய்யும் என்று நம்பியிருந்த மக்கள் இப்போது அந்த நம்பிக்கையை இழந்து வருகிறார்கள்.

சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் அரசாங்கம் ஐந்து காரியங்களைச் செய்தாக வேண்டும் என்று பாலசிங்கம் ஆலோசனையும் கூறியுள்ளார்.

வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் இருந்து படையினரை வெறியேற்றுதல் -

வீதித் தடைகளையும் சோதனைச் சாவடிகளையும் அகற்றிவிடுதல் -

மீன்பிடிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி மீனவர்களை இரவும் பகலும் சுதந்திரமாக மீன்பிடிக்க விடுதல் -

புலிகள் இயக்கம் மீதான தடையை எவ்வித நிபந்தனையுமின்றி நீக்குதல் -

அரசாங்கம் வாக்குறுதி அளித்ததுபோல் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது பற்றியே பேச்சுக்களை நடத்துதல் -

இவையே அரசு செய்ய வேண்டிய ஐந்து காரியங்களும் என்று பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார்.

மொத்தத்தில் சமாதான முயற்சிகளின் எதிர்காலம் அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது என்றும் பாலசிங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

கடந்த செவ்வாயன்று தமிழ்த் தேசிய முன்னணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்திலே ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்து பேசியபோது, அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சரிவர நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார்.

பிரேரணையை வழிமொழிந்த ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியும் புரிந்துணர்வு உடன்படிக்கை மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது என்றார். இந்த நிலையில் புலிகள் பேச்சுக்கு வருவார்களா என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

இவற்றுக்கெல்லாம் பதிலளித்துப் பேசிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் இருந்து படையினர் வெளியேறமாட்டார்கள் என்று அடித்துக் கூறினார்.

வழிபாட்டுத் தலங்களும் பாடசாலைகளும் எங்கிருந்தாலும் அவற்றில் இருந்து படையினரை விலக்காமல் விடுவது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறான செயல். அப்படிப்பட்ட செயலில் தாம் ஈடுபடப்போவதாக நாடாளுமன்றத்திலேயே ஓர் அமைச்சர் அறிவிக்கிறார் என்றால் சமாதான முயற்சியில் அரசு நேர்மையாக இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசிய முன்னணி எம்.பிக்கள் கூறியவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்ட பிரதமர், பேச்சை ஆரம் பிப்பதற்குமுன் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவதாகக் கூறினார்.

சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிர்க்கட்சிகளிடையே எதிர்ப்பு வலுத்துவரும் வேளையில் அதையும் சமாளிக்கக்கூடிய விதத்தில் கருமமாற்ற வேண்டியிருக்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு எப்பொழுதும் இருக்கத்தான் செய்யும். அதற்காக எடுத்த காரியத்தை இடையில் போட்டுவிடுவதா? பிரதமர் ஆரம்பத்தில் இருநத துணிவுடன் இப்போதும் செயலாற்ற வேண்டும்.

---

பொதுக் கட்டடங்களிலுள்ள

# படையினரை இடம்மாற்ற ரூபா 40 கோடி தேவை

## யாழ்.மாவட்டத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்7

குடாநாட்டில் பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ள இராணுவத்தினரை அங்கிருந்து அகற்றி, வேறு இடங்களில் முகாம்கள் அமைத்து, அங்கு அவர்களைத் தங்கவைக்க சுமார் 40 கோடி ரூபா செலவாகும். பாடசாலைகளில் தங்கியுள்ள படையினர் வேறு இடங்களில் முகாமிடமட்டும் ஐந்து கோடி ரூபா தேவைப்படுகின்றது. யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்த உலகவங்கி அதிகாரிகளுடன் பலாலியில் பேசிய போதே அவர் இப்படிக் கூறினார்.

வடக்கின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அவர் விளக்கிக் கூறினார்.

குடாநாட்டில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை முற்றாக அகற்ற 53 மாதங்கள் ஆகும் என்றும் அவர் சொன்னார்.

(ஒ-3)

---

## நாட்டு நடப்பு

### ஆண்டவன் மகிழ வேண்டில்

ஆலயம் பலவும் கட்டி
அழகுறு கோபுரம் அமைத்து
சாலவும் சிறப்பு வாய்ந்த
சப்பறம் தேரும் செய்து
மேலுமோர் தீர்த்தக் கேணி கட்டி
மிகப்பெரு மணிமண்டபமும் கண்டால்
நீலமா மேனி வண்ணன்
நிறைவுற மகிழுவானோ?
குலமகள் அழுது வாழும்
கொட்டில்கள் செப்பமிட்டால்
ஆலவாய் அமரன் கண்டு
அகமிக மகிழ்வானன்றோ?

- விகடகவி

---

# சில ஆலயங்கள், பாடசாலைகளில் படையினர் தொடர்ந்து தங்குவர்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்7

ஆலயங்கள், பாடசாலைகளில் தங்கியுள்ள படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி வெளியேறவேண்டியுள்ள போதிலும், சில ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து படையினர் உடனடியாக வெளியேற்றப்படமாட்டார்கள்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் முன்மொழிந்த ஒத்திவைப்புநேரப் பிரேரணை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், பலாலி விமான நிலையப் பகுதி போன்ற அதி உயர் பாதுகாப்புப் பிரதேசங்களிலுள்ள ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து பாதுகாப்புப் படையினர் வெளியேற்றப்படமாட்டார்கள். அவர்கள் அங்கே தொடர்ந்திருப்பார்கள்.

பாதுகாப்பு விடயத்தில் அரசு மிகவும் கவனமாக இருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள் தவிர்ந்த ஏனையவற்றிலிருந்து படையினர் வெளியேற்றப்பட்டாலும் பாதுகாப்புப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி வவுனியாவில் 2 பாடசாலைகளிலும், யாழ்ப்பாணத்தில் 11 பாடசாலைகளிலும், மட்டக்களப்பில் 4 பாடசாலைகளிலும் படையினர் தொடர்ந்தும் இருக்கின்றனர். மட்டக்களப்பில் இப்பொழுது மூன்று பாடசாலைகளில் இருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசாங்கம் புறக்கணிக்கவில்லை. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் மூன்றுமுறை தோல்வியில் முடிவடைந்துள்ளன. இம்முறை அப்படி நடக்கவிடாமல் பார்த்துக்கொள்வோம்.

- என்று தெரிவித்தார். (ஒ)

---

# நயினை அம்மன் ஆலயத்துக்கு தமிழகத்திலிருந்து விக்கிரகங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

மாமல்லபுரத்தைச் சேர்ந்த சிற்பக்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட அம்பாள் விக்கிரகங்கள் இன்று காலை 10 மணியளவில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

32 அறம்வளர்த்த திருக்கோலக் காட்சிதரும் அம்பாள் விக்கிரகம், காஞ்சி ஸ்ரீ விசுவநாதர் சமேத ஸ்ரீ காமாட்சி அம்பாள் விக்கிரகம், ஸ்ரீ நாகேஸ்வரி அம்பாள் சமேத ஸ்ரீ நாகேஸ்வரன் விக்கிரகம் என்பனவே இவ்வாறு பிரதிஷ்டை செய்யப்படவுள்ள விக்கிரகங்கள் ஆகும்.

இதேவேளை -

பல லட்சம் ரூபா செலவில் வெள்ளியில் அமைக்கப்பட்ட கொடித்தம்பமும் இன்று ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

மேற்படி இரு நிகழ்வுகளிலும் பங்குகொள்வதற்கென குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த அடியவர்கள் இன்று ஆலயத்தில் ஒன்றுகூடுவர். (எ-ரி)

---

# அரசின் சமாதான முயற்சிக்கு ராஜபக்ஷ தடையற்ற ஆதரவு!

கொழும்பு,ஜூன்7

அரசின் சமாதான முயற்சிகளுக்கு தங்குதடையற்ற ஆதரவைத் தாம் வழங்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில், 'தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து நாட்டு மக்கள் அனைவரும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

'சமாதானப் பேச்சுகளின் போது நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேணடியது அவசியமாகும்.

'எதிர்க்கட்சிகள் அனைத்தும் கட்சி பேதங்களைக் கைவிட்டு அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்'

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-4-ரி)

---

## நாளை

வைகாசி 25
சனிக்கிழமை
(08.06.2002)
திதி : திரயோதசி
பின்னிரவு 4.57 வரை.
நட்சத்திரம்: பரணி
முன்னிரவு 10.29 வரை.
சனிப்பிரதோஷ விரதம்
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம்: 8.52 - 10.22
(பழைய நேரப்படி)

---

## உதயவாக்கு

தோல்வி'னைச் சந்திக்காதவர் ஒரு நாளும் பணக்காரர் ஆவதில்லை.

---

# மரக்கறி விதை தயாரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்7

குடாநாட்டில் நல்லின மரக்கறி விதைகளை உற்பத்தி செய்வது குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கென விவசாயிகளில் ஒரு தொகுதியினர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான பயிற்சிகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

தற்பொழுது 'சீட்கோ' விதைகள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் மரக்கறி விதைகள் விநியோகிக்கப்படுவதாகவும் -

ஆனால், அவை குடாநாட்டுத் தேவைக்குப் போதுமானதாக இல்லாததால், விவசாயிகளுக்குத் தேவைப்படும் விதைகளை அவர்களே தயாரிக்க இந்தப் பயிற்சி நடவடிக்கை உதவும் என்றும் - விவசாயப் பயிற்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பிறவுண் அன்கொம்பனி நிறுவனத்தினால் நீர்ப்பானத்திட்டத் தொகுதிகள் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அண்மைக் காலமாகக் குடாநாட்டில் நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை நிலவுவதைக் கருத்திற்கொண்டு நீரைச் சேமித்து வைக்கும் பொருட்டு இந்த நீர்ப்பாசனத் தொகுதிகள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வாழை, தோடை மற்றும் பப்பாசி போன்ற பயிர்களுக்கு கொசிவுப் பாசனத் தொகுதியும் மரக்கறிப் பயிர்களுக்கு தாவரப் பாசனத் தொகுதியும் பொருத்தப்படவுள்ளன.

இம்மாதம் நடுப்பகுதியில் நீர்ப்பானத் தொகுதிகளை அமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்கென பிறவுண் அன் கொம்பனி நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இங்கு வருகை தரவுள்ளது. (ஒ-10)

---

# நிரந்தரத் தீர்வுக்கே முயற்சி நடக்கிறது என்கிறார் நிதி அமைச்சர் சொக்ஸி

கொழும்பு,ஜூன்7

போருக்கு நிரந்தர முடிவுகாண அரசு தீவிர முயற்சி எடுத்துவருகிறது என்று நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

போரை அரசு ஒருபோதும் விரும்பவில்லை என்றும் -

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

---

# செயலமர்வு திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா மற்றும் கல்விமாணி செயலமர்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.

இச்செயலமர்வுகள் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் -

குறுங்காலப் பயிற்சி பெறுவோருக்கான செயலமர்வில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் - சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (எ-13)

# வல்வெட்
# அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி
# மஹா கும்பாபிஷேக வி

## ஆதீன முதல்வரின் அருளாசி

*அம்பிகையடியார்களே!*

வல்வெட்டித்துறையம்பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் முத்து மாரி அம்பாளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறோம்.



பழைமையும் பெருமையும் வாய்ந்த வல்வையம்பதியில் எழுந்தருளி இருககும் அம்பிகை, அகில உலகிற்கும் தாயாக விளங்கும் அன்னை உடலிலும் உள்ளத்திலும் பிணயை நீக்கும் பொருட்டு இவ்வாலயத்தில் முத்துமாரியம்மையாக எழுந்தருளி உள்ளாள். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் அபிஷேகம், மஹாகும்பாபிஷேகம் எனப் படும். இதனைச் செய்விப்பதும் பார்த்து அனுபவித்தலும் புண்ணியத்தைத் தரக்கூடியது. அரிய பிறவியாகிய மானிடப் பிறவியை எடுத்த நாம் இறைவனை வணங்குவதன்மூலம் பிறவியினுடைய பெரும்பயனை அனுபவிக்கமுடியும். இதனை உணர்ந்த முன்னோர், கிராமங்கள் - நகரங்கள்தோறும் கோயில் அமைத்துள்ளனர். ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளும் விழாக்களும் மனிதனை மனித நேயத்தோடு வாழ வழிசமைக்கின்றன. இதனை உணர்ந்து நாம் ஆலயங்கள் தோறும் சென்று வழிபாடு செய்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. இன்று நிகழும் கும்பாபிஷேகம் இங்கு வாழும் மக்களுக்கும் ஊருக்கும் புனிதத்தை ஏற்படுத்தி அனைவரும் ஆனந்தமயமான ஆன்மீக வாழ்வு வாழ வழிவகுத்துள்ளது. இதனை அனைவரும் தரிசித்து அம்பிகையினுடைய அருளைப் பெறுவோமாக. இக்கும்பாபி ஷேகத்தை நடத்தும் குருமார்களுக்கும் பரிபாலன சபையினருக்கும் பொது மக்களுக்கும் அம்பாளுடைய ஆசி கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.*

**மஹா கும்பாபிஷேக தினத்தன்று நல்லை ஆதீன முதல்வரின் அருளுரை இடம்பெறும்.**







ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேதஆனந்த நடராஜாப்பெருமானின் அளப்பருங் கருணையினாலே பல திவ்ய சிவசக்தி குருஷேத்திரங்களையும் பாவங்களைப் போக்கும் பல புனித நதிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் புனிதபூமியாம் பாரதகண்டத்தின் தென்பால் அமைந்ததும், திருமூலரால் "சிவபூமி" எனஅழைக்கப்பெற்றதும். நாயன்மார்களால் பாடல் பெற்ற புண்ணிய தலங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதும் இந்துசமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுவதுமாகிய ஈழவள நாட்டின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணத்தின் வடகரையிலே அமைந்திருப்பது வீரஞ்செறிந்த பொன்னகாரம் வல்வை நகர். இத்திருநகரில் இந்தியாவின் கோடிக்கரையில் இருந்து எம்மை ஆட்கொள்வதற்காக ஓடத்தில் ஓடிவந்த தெய்வத்திருநாயகி ஸ்ரீ முத்துமாரி அன்னையானவள் இராசிந்தான் மணலில் கோவில் கொண்டும் வலது பாகத்திலே சிவனைக் கோயில் கொண்டெழுந்தருளச் செய்தும் எடுத்த விநாயகரை கிழக்குத்திசையிலே எழுந்தருள அமையச்செய்தும் அண்டசராசரங்கள் எல் அருளுகின்ற மாபெரும் சக்தியின் அவதார

**ஸ்ரீ மஹா மாரி**
**அருணமணி நிப**
**டமருகதர பாசப்**
**அநல நயனயுக்**
**அமவரஸ" பூஜ்**

## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசி

அம்பிகை அடியார்களே!

சரித்திரப் பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சம்புரோசஷண மஹா கும்பாபிஷேகம் சித்திரபானு வருஷம் வைகாசித் திங்கள் 24ஆம் நாள் (07.06.2002) சுக்கிர வாரமும் அச்சுவினி நட்சத்திரமும், சிங்க லக்கினமும் பொருந்திய



சுபமுகூர்த்தத்தில் இன்று நடைபெற திருவருள் கைகூடியிருப்பது சிறப்புடையது எனலாம்.

இந்த ஆலய கும்பாபிஷேகம் முப்பந்தைந்து ஆண்டுகளுக்குப் பின்பு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மூன்றாவது சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் 1935ஆம் ஆண்டு யுவ வருடம் ஆனிமாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் தமிழ்நாடு வேதாரணியம், சிவஸ்ரீ சு.சோமசுந்தரக் குருக்கள் அவர்களால் ஆகம விதிப்படி மிகச் சிறப்பாக நடந்தேறியது. நான்காவது சம்புரோசஷ்ண கும்பாபிஷேகம் 1967ஆம் ஆண்டு பராபவ வருஷம் ஆனி மாதம் 13ஆம் நாள் வியாழக்கிழமை இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் வேதாரணியம் சிவஸ்ரீ வே.தியாகராஜாக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இவர் மூன்றாவது மஹா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்த சிவஸ்ரீ சு.சோமசுந்தரக் குருக்களின் சிஷ்யராவார். இன்று எனது வித்தியாகுரு சிவஸ்ரீ வே.தியாகராஜாக்குருக்களாவார். இது எவ்வளவு பொருத்தமாகவுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் அன்னையின் திருவருள்தான் மூலகா ஷேகங்கள் வேதாரணியம் குருபரம்பரையினரால் செ அம்சமாகும். பல லலட்சம் ரூபா செலவில் ஆலயம் பு காட்சி தருகின்றது. இன்று நடைபெறும் அன்னையின் செய்வித்தோர், செய்பொருள் கொடுத்தோர், தொண்டுக ஷேகத்தைத் தரிசித்தோர், இதுபற்றிக் கேட்டோர் அ மாசற எண்ணிய பொருள் எல்லாம் எளிதிற் பெற்று ம மறுமைப் பயன்களைப் பெற்று அன்னையின் இறையடி ஆசிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றே

*"சர்வே ஜனாகா சுகினே*

'சிவாகம சித்தா
'பிரதிஷ்டாலங்கா
'பிரதிஷ்டா சிரோம
**சிவஸ்ரீ சோமாஸ்கர**
*(சமாதான நீதிபதி)*


வீ.பாலேந்திரதாஸ்
**சீவரெத்தினம் வெதுப்பகம்**
வல்வெட்டித்துறை.

வெ.தயாபரன்
**செல்லமயில் பல்பொருள் வாணிபம்**
காட்டுப்புலம்,
தொண்டமானாறு.

கண்ணன்
**விநாயகர் தொலைத் தொடர்பகம்**
பிள்ளையார் கோயிலடி, தொண்டமானாறு.
Tel.No.: 070-213204

சந்தானம்
**சந்தானம் ஸ்ரோர்ஸ் சைக்கிள் வேர்க்ஸ்,**
K.K.S. வீதி, தொண்டமானாறு.

பழனிவேல்
**பழனி ஸ்ரோர்ஸ்**
கே.கே.எஸ். றோட்,
தொண்டமானாறு.

சி.இந்திரதாஸ்
**அபிராமி ஸ்ரோர்ஸ்**
ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

வே.விமலநாதன்
**நிரு ஸ்ரோர்ஸ்**
கே.கே.எஸ். றோட்,
வல்வெட்டித்துறை.

A.S.சோ
**சோமசுந்தர**
கிழக்கு
வல்வெ

ஜெயவீரசிகாமணி
**ஸ்ரார் லைட் தொலைத்தொடர்பகம்**
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
Tel.No. 070-212921

பொ.குகானந்தராசா
**தண்டாயுதபாணி ஸ்ரோர்ஸ்**
ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

சு.மோகனசுந்தரம்
**செல்வி பான்ஸி பலஸ்**
கே.கே.எஸ். றோட், வல்வெட்டித்துறை.

A.S.சோ
**ஈஸ்வரன் தொலை**
கிழக்குத் தெரு,
Tel.No. 0

ஜெயக்குமரன்
**குமரன் தொலைத்தொடர்பகம்**
நெற்கொழு வீதி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
Tel.No. 070-212895

பா.உதயகுமார்
**ஞானம்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்**
அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.
Tel.No. 070-212673

கு.நகுலராசா
**மங்கையர்க்கரசி பல்பொருள்வாணிபம்**
வல்வெட்டித்துறை.

இ
**நியூ ஸ்ரார் ல**
வேம்படி, வல்

வீ.பாலேந்திரதாஸ்
**தர்ஸன் ஸ்ரோர்ஸ்**
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

இ.அமரசேனாதிபதி
**அம்பாள் வெதுப்பகம்**
அம்பாள் றோட்,
வல்வெட்டித்துறை.

த.பொன்னம்பலம்
**கணபதி தொலைத் தொடர்பகம்**
கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை.

T.செல்வசப
**சிவரஞ்சன**
வே
வல்வெ

# டித்துறை
# அம்மன் தேவஸ்தானம்
# றப்பிதழ் 07-06-2002







## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஆசியுரை



ஸ்ரீ லங்காவில் - வல்வெட்டித்துறையில் - புனிதத் திருக்கோயிலில் - கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு ஜூன் மாதம் 7ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் செய்ய இருப்பதையும் அதனைத் தொடர்ந்து சிறப்பு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து ஸ்ரீஸ்வாமிகள் மிக்க மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

நிர்விக்கினமாய் மஹா கும்பாபிஷேகம் நடந்தும் மலரும் மக்களுக்கு நன்கு பயன்படும்படி நறுமணத்துடன் அமையவும் உலகத் தாயான ஸ்ரீ முத்துமாரியம்மன் அருளால் உலகமனைத்தும் சகல மங்களங்களையும் அடைந்து பரமக்ஷேமமாக வாழவேண்டும் என்று பூஜ்ய ஸ்ரீ மஹா சந்நிதானம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆசீர்வதித்து தெரிவிக்கலான கார்யம்.

ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீமத் சமஸ்தானம்
No.1, சாலை வீதி, காஞ்சீபுரம் 631502
தென்னிந்தியா.

காதேவி தியானம்
ாங்கம் அக்நிகேசம் கரண்டம்
கட்கம்ஹஸ்தம் கபாலம்
மம் ஹாரகேயூர பூஷயம்
ழியம் மாரி தேவிரூபம்

காரியங்களை இனிதே முடிப்பிக்கும் திருச்சிற்றம்பல ர்செய்தும் இன்னும் பல தெய்வங்களை சூழவர ாவற்றையும் ஆக்கி, அழித்து, காத்து, மறைத்து ாக விளங்கி அருளாட்சி செய்தும் வேதாரணிய

பரம்பரை சைவக்குருமாரால் நித்திய, நைமித்திய கிரியைகள் செய்யப்பெறுவதுமாகிய வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் இராஜகோபுரத்துக்கும் ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் வைகாசித் திங்கள் 24ஆம் நாள் (07.06.2002) வெள்ளிக்கிழமை அச்சுவினி நட்சத்திரமும் அமிர்தசித்தயோகமும் துவாதசித் திதியும் கூடிய நண்பகல் 11-56 மணிமுதல் 12-37 மணிவரை உள்ள சிங்க லக்கின சுப முகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற எம்பிராட்டியின் பேரருள் கிடைக்கப்பெற்றுள்ளது. அன்றையதினமும் அதற்கு முன்பும் நடைபெற இருக்கும் கிரியைகளில் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து அன்னையை தரிசித்து திருத்தொண்டுகள் புரிந்து அம்பிகையின் பேரருளை பெற்றுய்வார்களாக.

## யுரை

ரணம். இந்த ஆலய மஹாகும்பாபி ப்யப்பட்டு வருவது ஒரு முக்கிய னரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் கும்பாபிஷேகத்தைச் செய்தோர், ள் செய்தோர், பக்தியுடன் கும்பாபி னைவரும் மண்ணுலகத்தில் பிறவி ங்கலம் பொழிய வாழ்ந்து, இம்மை போற்றி, அடியேனின் உளங்கனிந்த ன்.

*ா பவந்து"*

ந்த ஞானதேசிகபானு',
ர சித்தாந்தஸாகரம்',
னி', 'தேவி பூஜா துரந்தரர்'
ந்த தண்டபாணிகதேசிகர்,
*மேற்படி தேவஸ்தான பிரதமகுரு.*

## சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவரின் ஆசிச் செய்தி



உலகின் தாயாக விளங்கி வல்வெட்டித்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை முத்துமாரி அம்மனுக்கு இன்று கும்பாபிஷேக விழா நடைபெறுவதையிட்டு நாம் அனைவரும் பெருமகிழ்வு அடைகின்றோம். வல்வையின் மத்தியிலே நடுநாயகமாக விளங்குவது இரண்டு பெரிய ஆலயங்கள். வைத்தீஸ்வரன் ஆலயம் வலப்புறமும் மாரியம்மன் ஆலயம் இடப்புறமும் அமைந்து அழகிய பஞ்சதள கோபுரங்களுடன் வல்வை மண்ணின் பெருமையை உணர்த்தி நிற்கின்றன. திரைகடல் ஓடியும் திரவியம் தேடிய வல்லை மக்களால் அமைக்கப்பட்ட இந்த ஆலயங்களில் இன்று மாரி அம்பாளுக்கு குடமுழுக்கு எனப்படும் பெருஞ்சாந்தி விழா மிகவும் கோலாகலமாக நடைபெறுகின்றது. பல லட்சம் ரூபா செலவில் புதிய மெருகுடன் அமைக்கப்பட்ட இந்த ஆலயமானது மிகவும் தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுப் பெருமை மிக்கதுமாகும். பல நாடுகளில் வாழும் வல்வை வாழ் பெருமக்களின் நன்முயற்சிதான் இப்பணி சிறப்புற அமையக் காரணமாக அமைந்திருக்கின்றது. எல்லாம் வல்ல அன்னை பராசக்தி முத்துமாரித் தாயின் குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா மூலம் நாட்டில் நிரந்தர அமைதியும் சாந்தியும் சமாதானமும் கிடைத்து மக்கள் சுபீட்சமாக வாழ அன்பான ஆசிகள் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*"சர்வேஜனாகா சுகினோபவந்து"*

பிரதம குரு
பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்
சிவன்கோயில், வல்வெட்டித்துறை.

(4471)


S.பொன்னுச்சாமிப்பிள்ளை
றோயல் மெடிக்கல் சென்ரர்
மதுரங்குளி, புத்தளம்.

கொரனேசன் ஸ்ரோர்ஸ்
172, ஏகாம்பரம் றோட்,
திருகோணமலை.

நியூ சிற்றி ஜுவலர்ஸ்
176, ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.

ஆர்.வி.ஜி. மெடிக்கல்ஸ்
504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மசுந்தரம்
ம் ஸ்ரோர்ஸ்
த் தெரு,
டித்துறை.

ராதாகுமார்
நந்தகுமார் ஸ்ரோர்ஸ்
வேம்படி, வல்வெட்டித்துறை.

ந.இராஜேஸ்வரன்
இரத்தின மாளிகை நகை வாணிபம்
வல்வை சைக்கிள் மாட், வல்வை
தொலைத் தொடர்பு நிலையம்
தெணியம்பை, வல்வெட்டித்துறை.
Tel.No./FAX: 0094-70 -212745

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
77, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2469

மசுந்தரம்
த்தொடர்பு நிலையம்
வல்வெட்டித்துறை.
070-212238

சோ.தண்டாயுதபாணிதேசிகர்
கோபிகா தொலைத்தொடர்பு நிலையம்
உடுப்பிட்டி வீதி, வல்வெட்டித்துறை.
Tel.No.: 070-212267

தருமராசா
சுகணலஷ்மி ஆடையகம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

ராஜ் ஸ்ரோர்ஸ்
ராஜ் பில்டிங், 67, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

பாபு
தயல் நிலையம்
வெட்டித்துறை.

இராசகோபால் ரவிக்குமார்
பிரியா வீடியோ சென்ரர்
வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

பொ.குட்டிராசா
தொலைத் தொடர்பகம்
ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை.

ஸ்ரார் ஹாட்வெயர்
உடுப்பிட்டி.

பதிப்பிள்ளை
ஸ்ரோர்ஸ்
ம்படி,
டித்துறை.

நா.யோகீஸ்வரராஜா
நாகேஷ் ஸ்ரோர்ஸ்
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

வல்வினைகள் நீக்கிடுவாய்
வல்வை முத்துமாரியம்மா!
சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கு நாடுங்கள்:
வாணி வீடியோ ஹோம்
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

தி.மோகனசபாபதிப்பிள்ளை
பழநி கபே
ஊறணி, வல்வெட்டித்துறை.

## வேலணை பிரதேச சபை அறிவித்தல்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது **10.06.2002 முதல் ஆரம்பமாகி 25.06.2002 வரை** நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக் காலப்பகுதியில் ஆலயவீதியிலும், வெளிச்சுற்றாடல்களிலும், புங்குடுதீவு குறிகாட்டுவான் பகுதிகளிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரம் செய்வோர் வேலணை பிரதேச சபையின் நயினாதீவு, புங்குடுதீவு உபபணிமனையுடன் தொடர்புகொண்டு அனுமதிப்பத்திரம் பெற்று பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடவேண்டும்.

02. நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச்சேவையில் ஈடுபடுகின்ற படகு உரிமையாளர்களும், இக்காலப்பகுதியில் விசேட படகுச்சேவை நடத்த வருகின்ற படகு உரிமையாளர்களும் நயினாதீவு உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பிரதேச சபை கட்டளைச் சட்டத்திற்கமைவாக சபையினால் விதிக்கப்படும் வரி அறவீட்டுத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும்.

03. உயர்திருவிழாக் காலப்பகுதியில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரையும் பிரதான வீதியிலும், யாத்திரீகர் மடத்திற்கு அப்பாலும், ஆலயத்திற்கு தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியில் மேற்கு மதில் எல்லைக்குள்ளும், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

04. குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உபபணிமனையினால் வாகனம் நிறுத்தும் இடவசதிகள், சுகாதார, குடிதண்ணீர் வசதிகள் என்பன மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சகல வாகன உரிமையாளர்களும் வேலணை பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் பணிக்கப்படும் ஒழுங்குமுறைகளைப் பேணுவதுடன், அதற்கான கட்டணத்தையும் வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

05. விழாக்காலத்தில் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக நடந்து கொள்வதுடன், எமது கலை, கலாசார விழுமியங்களுக்கு ஊறுவிளைவிக்கும் எந்தச் செயல்களிலும் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் - ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்."

(C/22413)

**திரு.இளையதம்பி நவரத்தினம்**
உபதலைவர், வேலணை பிரதேச சபை.

*வேலணை.*

## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் விவசாயம், மீன்பிடி மற்றும் மீள்குடியமர்வு போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக முக்கிய பிரமுகர்களுடன் கலந்துரையாடி ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசசார்பற்ற சமய, சமூக தொழிற்சங்க நிறுவன அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை முன்வைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மீசாலையில் உள்ள சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதேசத்தில் செய்கை பண்ணப்படாத நெல் வயல்கள், விவசாயநிலங்கள், மற்றும் விதைநெல் வழங்கல், விவசாயிகளுக்கு வங்கிக் கடன்பெறுதல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படுமென தென்மராட்சி பெரும்பாக உத்தியோகத்தர் சு.சத்தியேந்திரா அறிவித்துள்ளார். (எ-117)

## ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம்

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்து ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் அக்கட்சியின் தலைவர்கள், பௌத்தபிக்குகள் சிலர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும்12 ஆம்திகதி நுகேகொடயில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் ஜே.வி.பி. திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

## மாட்டு வண்டில் சவாரிச் சங்கப் பொதுக்கூட்டம்

**இடம் : சுன்னாகம் சிவன் கோயில் முன்னிலையில்**

**நாள் : 08.06.2002 சனி பிற்பகல் 3.30மணி**

**புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெறும்.**

*(சவாரிப் பிரியர்கள் அனைவரும் கலந்துகொள்ளவும்)*

- க.இராசதுரை
*(மா.வ.சங்க செயலாளர்)*

*ஆவரங்கால்.* (4506)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரிய பயிலுநர்
**அ.சேகரன்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அரியரத்தினம் கமலாதேவி

அவர்களின் திடீர் மறைவினால் நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன், துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்; அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகிறோம்.

**முதலாம், இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.**

(4546)

## நெஞ்சகலாத நினைவலைகள்



கதிரித்தம்பி சிவசம்பு



திருமதி செல்லாச்சி சிவசம்பு


13.06.1914 ← தோற்றம் → 26.09.1927
14.08.1992 ← மறைவு → 08.05.2002

**அகிலமெல்லாம் சிறக்க எம்மையெல்லாம் வழிநடத்திய எம் அன்புத் தெய்வங்களுக்கு எமது அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.**

*அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.* (4447)

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில் 1928.05.29
மண்ணின் மடியில் 2002.05.09

## வ.வ.இ.நடனசிகாமணி

(மணியண்ணா) வல்வெட்டித்துறை
(உரிமையாளர்-கொரனேசன் ஸ்ரோர்ஸ், நியூசிட்டி ஜுவலர்ஸ், திருகோணமலை, முன்னாள் தலைவர், வல்வை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

*அன்பின் திருவுருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எங்கள் அன்பு ஐயாவே!
அன்பின் சிகரமாய், பண்பாய் எம்மை வளர்த்து
இன்று பாதியிற் தவிக்கவிட்டு
கப்டன் அலன் மற்றும் தம் பாரியார் உடன் சென்றீரோ?
மண்ணோடு கலந்தாலும் உங்கள் அன்பை விட்டுச் சென்றீரோ?
பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை விட்டு நீங்கள் வெகுதூரம் சென்றீரோ?
உங்கள் உடன்பிறப்புக்களையும் விட்டுச் சென்றீரோ?
நாம் கலங்கி நிற்கிறோம்!*

ஓம் சாந்தி!

(4464)

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத்துயர் கேட்டு எம்முடன் தொலைபேசியிலும், நேரிலும் வந்து எமக்கு ஆறுதல் கூறி இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (08.06.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை.*

*அன்புத் தெய்வத்தின் அரவணைப்பில் வாழும்*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# செய்திக்கொத்து

## நியமனம்

வலி.தெற்கு,ஜூன்7

கந்தரோடை, உடுவில் பகுதிகளுக்கான பொதுச்சுகாதார பரிசோதகராக கே.ஜெய்சங்கர் கடந்த மாதம் 16 ஆம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (எ-13-152)

## சொந்த இடத்தில் கைதடி பாடசாலை

கைதடி,ஜூன்7

கைதடி,நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதேவேளை-

மேற்படி பாடசாலை மூலம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தமது பெயர் விவரங்களை பதிவு செய்து கொள்ளவேண்டுமென வித்தியாலய அதிபர் வ.த.திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (எ-13)

## 5ஆம் ஆண்டு நிறைவு விழா

நெடுங்கேணி,ஜூன்7

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சமூக சுகாதார அபிவிருத்திச் சபையின் 5ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

## கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்மத்திய கல்லூரியின் மகேசவரி கணனி வள நிலையமும், யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து நடத்தும் கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம என்றும் -

விண்ணப்பிப்போர் கல்லூரியின் கணனி வள நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்று, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை ஒபபடைக்க வேண்டும் என்றும் கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (எ-13)

## மைதானம் புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன்,ஜூன்7

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை சமூகத்தினரால் மேற கொள்ளப்படும் இந்த புனரமைப்புப் பணியின் ஒருகட்டமாக சிரமதானததுடன் மைதானத்தைச்சுற்றி சிமெந்துத் தூண்கள் நிறுவி, முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு வருகின்றது. (எ-13-133)

## கட்டடங்கள் திறந்துவைப்பு

ஏழாலை,ஜூன்7

ஏழாலை ஞானகலா சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம் என்பவற்றுக்கான புதிய கட்டடங்களின் திறப்பு விழா கடந்த 27 ஆம திகதி நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் அமைகக்பட்ட இக்கட்டடத்தின் திறப்பு விழாவில் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் எஸ். கமலசேகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-13-ரி)

## சந்தை அமைப்பு வேலைகள் மந்தகதியில்

கொழும்புத்துறை,ஜூன்7

அரியாலை, பூங்கன்குளப் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் பொதுச் சந்தை வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

இதனால், மேற்படி பகுதிகளில் மீளக் குடியமரும் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது. (எ-13-ரி)

## துப்பாக்கி முனையில் கொள்ளை

வல்வெட்டித்துறை,ஜூன்7

உடுப்பிட்டிப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 28ஆம் திகதி நள்ளிரவு கைத்துப்பாக்கி முனையில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. (எ-13-ரி)

---

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

மட்டுவில் வடக்கு அம்பாள் சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்கான மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி.

இடம்:- புத்தூர் ஸ்ரீவிக்கினேஸ்வரா சவாரித்திடல்

காலம்:- 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00மணி.

இபபோட்டியில் வன்னி மாவட்ட காளைகளும், யாழ்.மாவட்ட காளைகளும் கலந்துகொள்ள இருப்பதால், சவாரிப் பிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்.

- அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகிகள்.

பிரவேசம் 10/= (4584)

---

## =HSCMF=

**Certificate in Psychology**

*(உளவியலில் சான்றிதழ்)*

தபால்மூலம்

விபரங்களுக்கு சுயமுகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டிய கடித உறையுடன் தொடர்பு கொள்க.

☆ ACADEMIC - COORDINATOR,
HSCMF,
NAVALY NORTH, MANIPAY. (4549)

---

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

**DAY CLASS**

CHEMISTRY - திரு. மகேஸ்வரன்

ஆரம்பம்:- 10.06.2002 திங்கள் காலை 7மணி

வினா விடை வகுப்பு - சனி, ஞாயிறு

ஆரம்பம்:- 09.06.2002 ஞாயிறு காலை 8மணி (4578)

---

## யுனைட்ரட் புறுவரி லிமிட்டெட்

எங்கள் உற்பத்திப் பொருள்களைக் கீழ்க்காணும் சில்லறை விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

கிங்ஸ் லாகர் 60/=
கிங்ஸ் ஸ்ரவுட் 80/=
கிங்ஸ் பைசன் (ஸ்ரோங்) 95/=
கிங்ஸ் பில்ஸ்னர் 75/=

சகல உத்தரவுபெற்ற மதுபான நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:
"வாமாஸ்",
ஸ்ரான்லி வீதி, யாழப்பாணம். (4566)

---

உ



## கைதடி கயற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

## மஹோற்சவம் = 2002

கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஆனிமாதம் முதலாம் திகதி (15.06.2002) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைகக இடம் வழங்கும் நிகழ்வு (ஏலம் போடுதல்) 09.06.2002 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும். கடைகள் எடுப்பவர்கள் உடன் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

பரிபாலன சபையினர்.

கைதடி வடக்கு. (4574)

---

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

அலகு ரீதியான மீட்டல் வினாவிடை வகுப்புகள்

சனி - ஞாயிறு

| | | |
|---|---|---|
| 09.00-10.00 → | CHEMISTRY | - திரு.மணியம் |
| 10.00-11.00 → | PHYSICS | - திரு.குமரன் |
| 11.00-12.00 → | BOTANY | - வழமையான ஆசிரியர் |
| 12.00-01.00 → | ZOOLOGY | - திரு.கெங்காதரன் |

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. (4573)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY



## செல்வன் விஜயகுமார் அபிஷன்

### 07.06.2002

திருநெல்வேலி, தாளையடியைச் சேர்ந்த

**திரு. திருமதி விஜயகுமார் - சிவாஜினி**

தம்பதிகளின்

**செல்வப் புதல்வன் அபிஷென்**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று(07.06.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சுவிஸில் உள்ள அத்தைமார், மாமாமார், மச்சாள்மார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அக்கா, கனடாவில் உள்ள பெரியப்பாமார், பெரியம்மா, தங்கை மற்றும் யாழில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், மாமாமார், சித்தப்பா, அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அபிக்குட்டியை மணக்கும்பான் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*தாளையடி லேன்,*
*திருநெல்வேலி.* (4555)

தகவல்:
ப.விஜயகுமார்
(அப்பா).

---

## மரண அறிவித்தல்

### கந்தையா அம்பலவாணர்

இணுவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா அம்பலவாணர்(ஓய்வுபெற்ற உள்ளூராட்சிமன்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்) நேற்று (06.06.2002) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்- தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், சந்தரவதனியின் அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி திருமதி பிறேமா சிவசண்முகராசா(கைதடி அரச சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை), ஜெகதீஸ் (ஆஸ்திரேலியா), ரகுபதி (யாழ்.மருத்துவபீடம் - 4ஆம் வருட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (ஆஸ்திரேலியா) யின் அன்பு மாமனாரும் அபிராமி, அனுபாமா, துவாரகன், சாருஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*அ.ரகுபதி*
*இணுவில் மேற்கு, இணுவில்.* (4562)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## கணக்கீடு ஆசிரியர்:- S.தவா B.Com. (Hons) {Acc.Spl.}

| | | |
|---|---|---|
| A/L 2003:- ஒப்படைக்கணக்கு<br>நாளை 3.00 p.m.<br>A/L 2004:- தனிவியாபார முடிவுக் கணக்கு<br>நாளை 2.00 p.m.<br>NEW SCIENCE COLLEGE<br>JAFFNA. | A/L : 2004<br>தனி வியாபார முடிவுக் கணக்கு<br>நாளை 7.30 a.m.<br>நிரு கல்வி நிலையம்<br>கோண்டாவில். | A/L : 2003<br>வங்கிக் கணக்கிணக்கக் கூற்று<br>நாளை 12.00 (நண்பகல்)<br>A/L 2004 - காசேடு<br>C.C.A.<br>சுன்னாகம். |

"உங்கள் தேவையை நிறைவுசெய்ய எனது பரந்த சேவைகள்" (4570)

# காரைநகரின் சில இடங்களில் மீளக்குடியமர கடற்படை அனுமதி

காரைநகர்,ஜூன்7

காரைநகர் தோப்புக்காடு, சாந்தி புரம் பகுதிகளில் மக்கள் மீளக்குடிய மர கடற்படையினர் அனுமதி வழங்கி யுள்ளனர்.

1989இல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இப்பகுதிகளில் இருந்து 450இற்கும் மேற்பட்ட குடும் பங்கள் இடம்பெயர்ந்தன.

தற்போது இப்பகுதிகளில் மீளக் குடியமர 200 குடும்பங்கள் வன்னி யில் இருந்து வரவுள்ளதாகவும் -

அவர்கள் மீளக்குடியமர்வதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்துதருமாறு கோரி மேற்படி குடும் பங்கள் ஒன்றிணைந்து ஊர்காவற் றுறை உதவி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளதாக வும் - தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர உள்ள குடும்பங் களை காரைநகர் பாலாவோடை அ.த.க. பாடசாலை கட்டடங்களில் தற் காலிகமாக தங்கவைக்குமுகமாக இப் பாடசாலையும், அயலில் உள்ள மூன்று பொதுக் கிணறுகளும், அம்பலா வீதி யும் சிரமதானப் பணி மூலம் எதிர் வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை களில் துப்புரவு செய்யப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த சிரமதானப் பணியில் காரை நகர் பகுதியில் உள்ள கிராம சேவை யாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி செயலணிகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பிரதேச சபை ஆகியவற்றின் உறுப்பி னர்களும் பொதுமக்களும் ஈடுபடவுள் ளனர்.

(ஒ-73)


## விக்னா கல்வி நிறுவனம்

**A/L 2004 கலை, வர்த்தக வகுப்புகள்**

**புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன** Sat., Sunday 7

| | | | |
|---|---|---|---|
| Acc. | - திரு.பாலவாசன் | H.C. | - திரு.பத்மராஜா |
| Eco. | - திரு.விக்கி | Geo. | - திரு.பாபு |
| Com. | - திரு.நந்தீஸ் (பிரிவு I) (9-10) | Hist. | - திரு.சுதன் |
| | திரு.யசோ (பிரிவு II) (7-8) | P/Sci. | - திரு.றொபின்சன் |
| Log. | - திரு.சயந்தன் | Chri. | - திரு.வசந்தன் |
| Tam. | - திரு.குழந்தை (பிரிவு 1) (7-8) | | |
| | திரு.லிங்கம் (பிரிவு 2) (10-11) | Dra. | - திரு.மதி |

(4599) அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.


## முக்கிய அறிவித்தல்

**பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கலந்துரையாடல்**

மேற்படி சங்கங்களின் நெறியாளர் குழு, பொதுமுகாமையாள ருக்கான பனை, தென்னை அழிப்பைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று (07.06.2002) வெள்ளிக்கிழமை முற் பகல் 11.00 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதால் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*52, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* - தலைவர்.

(4591)

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகரும்,
எமது முன்னாள் நலன்புரிச் சங்க உறுப்பினருமான
அன்புக்குரிய

### க.யோகராசா

அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவ னைப் பிரார்த்திக்கின்றோம்.

- யாழ்.கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்
நலன்புரி கூட்டுறவுச்சங்கம்,
கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(C/22424)

## கண்ணீர் அஞ்சலி

மூத்த தமிழ் பெருந்தலைவரும்,
தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், சட்டவல்லுநருமான

### அமரர் உயர்திரு.முருகேசு சிவசிதம்பரம்

அவர்கள் 05-06-2002 அன்று அமரத்துவம் எய்தியமையிட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாகச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக்கொள்கின்றோம்.

தலைவர், உப-தலைவர்,
உறுப்பினர்கள், செயலாளர்,
உத்தியோகத்தர்கள்
மற்றும் ஊழியர்கள்.

*வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.*

(C/22423)

## வீடியோ படக் காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்ட மும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் சார்லி சப்ளி னின் திரைப்படங்கள் தொடர்ச்சியா கக் காண்பிக்கப்படுகின்றன.

இந்த வரிசையில் நாளை சனிக் கிழமை காலை 10 மணிக்கு புவி யியற்றுறை மண்டபத்தில் 'The Gold Ruse', 'Pay Day' ஆகிய இரு படங் கள் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வலர்கள் எவரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப் பாளர் தெரிவித்திருக்கின்றார்.(ம-ரி)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்ட வனவளப் பிரிவினர் வடமராட்சி,தென்மராட்சி பகுதிகளில் உள்ள விறகு காலைகள், அரிவு காலைகளின் உரிமையாளர்கள் மற் றும் மரத் தரகர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள் ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு நெல்லியடி அரசியல்துறை செயலகத்திலும் -

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந் தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தென்மராட்சி அரசியல் துறை அலுவலகத்திலும் நடைபெறவுள ளது. (எ-9)

## கிழக்கிலும்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

"போராட்டத்தின்போது படையினரால் மாணவர்கள் அநியாயமாகக் கொல் லப்பட்டனர்.

"கல்வித்துறை மேலோங்க எமது பிரதேச மக்கள் அனைவரும் ஒத்து ழைக்கவேண்டும் மரநிழலில் இருந் து கல்வி கற்கவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். 25 ஆண்டுகளாக அடக்கப்பட்டதாலேயே நாம் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டோம். தற்போது போராட்டத்தை நடத்திக்கொண்டிருக் கிறோம். மாணவர்கள் எமது போராட் டத்தின் ஓர் அங்கம். மாணவர் சக்தி மாபெரும் சக்தி" என்றார்.

பின்னர் மாணவர்களினால் தமிழீ ழத் தேசிய மாணவர் பிரகடனம் ஒன் றும் அறிவிக்கப்பட்டது. அதில் அடங் கும் விடயங்கள் வருமாறு:-

★ ஒப்பந்தத்தின் பிரகாரம் பாட சாலைகளில் இருந்து படையினர் உடன் வெளியேறவேண்டும்.

★ மாணவர்களின் பாவனைக்கு அவசியமான, வெபர் மைதானம், வாசிகசாலைகள் போன்ற பொதுக் கட்டடங்களில் இருந்து படையினர் உடனே வெளியேறவேண்டும்.

★ தமிழ்ப் பாடசாலைகளில் நில வும் ஆளணி மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறைகள் பூர்த்தி செய்யப் படவேண்டும்.

★ ஆசிரியருக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய வேலையற்ற பட்டதா ரிகளுக்கு உடன் நியமனம் வழங்க வேண்டும்.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலையிலும், புலிக ளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூ ரிலும் தியாகி சிவகுமாரன் நினை வாக மாணவர் பேரணி ஒன்று நடை பெற்றது. காலை 10.30 மணியள வில் சாம்பலூர் மகாவித்தியாலயத் தில் ஆரம்பித்து நண்பகல் 12.30க்கு சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய முன்றிலை வந்தடைந்தது. மூதூர் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பல் லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர். பேரணியின் முடிவில் மாணவர் பிரச்சினைகளைக் கருப் பொருளாகக் கொண்டு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஒ)

# சொந்த வள்ளங்களில் மீனவர் வன்னியிலிருந்து வர நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் தற் காலிகமாகத் தங்கியுள்ள மீனவர்கள் கடல்மார்க்கமாகத் தமது வள்ளங்க ளில் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கான ஏற்பாடுகளை தமிழர் கூட்டமைப்பு அரசுடன் பேசி ஒழுங்கு செய்ய உள் ளது என நேற்று யாழ். செயலகம் முன்பாக நடைபெற்ற மீனவர்களின் மறியற் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இருந்து நேற்று முன்தினம் பருத்தித்துறைக் கடற் பரப்பை நோக்கி 16 படகுகளில் வந்த மக்களை கடற்படையினர் திருப்பி அனுப்பியது தொடர்பாக கேட்கப் பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த எம்.கே.சிவாஜிலிங்கம், இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ள யாழ். மாவட டத்தைச் சேர்ந்த மக்கள் கடல் வழி யாகக் குருநகர் மற்றும் பருத்தித்துறை இறங்குதுறைகளில் வந்து இறங்கக் கூடிய ஒழுங்குகளை அரசுடன் பேசி செயற்படுத்த முயற்சித்துள்ளதாக மேலும் தெரிவித்தார். (ஒ-51)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்7

மறைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்பட்ட மறை ஆசிரியர் பயிற்சி யில் பங்கு பற்றியோருக்கான சான்றி தழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## சி.செல்லத்துரை

**(தனியார் சங்கக்கடை - உரிமையாளர்)**

தொட்டிலடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த சி.செல்லத்துரை 05.06.2002 புதன்கிழமை இயற்கைமரணம் எய்தினார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் மகிழ்ராசா (சுவிஸ்), ரவீந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொட்டிலடி, சண்டிலிப்பாய்.* (4592)

தகவல்: செ.ரவீந்திரன் (மகன்)

## மாகிறேட் லிகோரி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய மாகிறேட் லிகோரி நேற்று (06.06.2002) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாமிநாதர் லிகோரியின் (தபால் அதிபர், அலம்பில்) அன்பு மனைவியும் ஜெயக்குமார் (லண்டன்), அருட்தந்தை சந்திரகுமார் (அமெரிக்கா), செல்வக்குமார் (கனடா), உதயகுமார் (பிரான்ஸ்), நிர்மலா வசந்தகுமாரி (லண்டன்), ராஜகுமார் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் வயலட், மாலா, ராணி, ஜெயசீலன், றமனி ஆகியோரின் மாமியாரும் செலஸ்ரின் மற்றும் காலஞ்சென்ற கிறிஸ்ரின், திரேசம்மா, ஜேசுதாசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P.No. - 3344*
*லண்டன் T.P.No. - 00442086650952*

தகவல்: செலஸ்ரினா சாமிநாதர் (மைத்துனி)

(4596)

## செல்வன் ஜெயக்கொடி சஞ்சீவன்

கோட்டைக்காடு, மல்லாகத்தைச் சேர்ந்த ஜெயக்கொடி சஞ்சீவன் 05.06.2002 புதன்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயக்கொடி - வசந்தராணி (லீலா) அவர்களின் அன்பு மகனும் ஜெயவாணி, ஜெனார்த்தனன், சுலேக்கா (யா/யூனியன் கல்லூரி) கௌதமன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நதீஸின் அன்பு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (07.06.2002) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோட்டைக்காடு, மல்லாகம்.* (4598)

தகவல்: வே.ஜெயக்கொடி (தந்தை - லொறி உரிமையாளர்)

## திருமதி கந்தையா அன்னம்மா

**(அன்னக்கா)**

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா அன்னம்மா அவர்கள் 05.06.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கதிர்காமர் - பார்வதியின் மருமகளும் மகேஸ்வரி, ராசமணி, குமாரசாமி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ் சென்ற E.S.S.அருணாசலம் மற்றும் சுவாமிநாதபிள்ளை, தனபதி ஆகி யோரின் அன்பு மாமியாரும் இராசமனோகரன் (மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்), திருமதி இரஞ்சனாதேவி பாலேந்திரன் (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), தேவமனோகரன் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கண்டி), திருமதி இராசதேவி பரமானந்தம் (கனடா), திரு மதி இராசமலர் உதயகுமார் (U.K.), சுலோச்சனா (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), கனடாவில் வசிப்பவர்களான கிருபாகரன், செல்வா கரன், ஐங்கரன் ஆகியோரினதும் U.K. இல் வசிப்பவர்களான திருக் குமரன், குமாரதாசன், ரஞ்சன், திருமதி பவானி சியாம், ஜனனி ஆகியோ ரினதும் சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கார்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), ஜனகன் (பரியோவான் கல்லூரி), கொக்கு வில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் செந்தூரன், கஸ்தூரி, சர் மிலன், சாமந்தி ஆகியோரினதும் கனடாவில் வசிப்பவர்களான அனு, அனந்தன், பானு, பாரி ஆகியோரினதும் மாதுமை (கண்டி), ஜெயபவன் (கண்டி), சயன் (U.K.), பேபி சியாம் (U.K.) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2002) சனிக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்கன் வளவு, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.* (4603)

தகவல்: S.இராசமனோகரன் (மக்கள் வங்கி)


**A/L 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி நெறி**

**பிரிவு-III ஆரம்பம் *08.06.2002 (10a.m)***

**JAFFNA TECHNICAL INSTITUTE**
**JAFFNA, SRI LANKA**

இல.07,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(...யடிச் சந்தியருகில்)

# அரசின் இனவாதப் போக்கு தமிழ் மாணவருக்கு எதிரானது!

## மாணவர் எழுச்சி தினத்தில் பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் இனவாதப் போக்குகள் தமிழ் மாணவர்களுக்குப் பொருந்தாக் கொள்கையாகவே உள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நிகழ்வுகளின்போது வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவப் பருவத்தின் கல்வி மனித வாழ்வின் அத்திவாரம் போன்றது. கல்வியாளர்களும், உளவியல் மேதைகளும் இந்த உண்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளனர். இதனால் மிக்க பொருட்செலவும் பிரயத்தனங்களும் கொடுக்கப்பட்டு, மாணவர்களின் அடிப்படைக் கல்வி வளர்க்கப்படுவது அவசியமாகின்றது. வெற்றிகரமான வாழ்விற்கான ஆயத்த நிலைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கல்வியினால் அடையப்பட வேண்டிய திறன்கள், சில நாடுகளில் அடையப்படாது தமிழ்மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுத் தோல்வியடைவதுடன் பெறுதற்கரிய மாணவ வளமானது வளப்படுத்தல் குறைகளால் வீண் விரயம் செய்யப்படுகிறது. இதன் காரணமாக தமிழ் மாணவர்களின் எதிர்கால வாழ்வு இருள்மயமாவதுடன், திறன்களற்றவர்களாக, வெளியுலகில் அநாதரவாக விட்டுவிடுகின்ற செயல்கள் மிகவும் கொடுமை நிறைந்தவையாகும்.

கல்வி என்பது அறிவை மட்டும் விளங்கிக்கொள்ளும் செயல்களன்றி, நிதமும் மாறிவரும் வாழ்வின் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கக் கூடிய இயல்பாக்கத்தையும் சமநிலை ஆளுமையையும் கொண்ட மனிதனை உருவாக்கும் ஒரு செயன்முறையாகும். உலகில் வளர்ந்த நாடுகள் யாவும் இதனை உணர்ந்துகொள்ளத் தவறவில்லை. இதன்காரணமாக கல்வி அந்நாடுகளின் வளர்ச்சிக்கு முக்கியபங்கு வகிப்பதுடன், கல்விக்கான அளவீடுகள் யாவும் திட்டமிடப்பட்டு, அதனது தரத்தை உயர்த்தும் நோக்கில் வளர்க்கப்பட்டு வருகிறது. இலங்கையில் தமிழர்கள் மீதான பாரபட்சமான ஆட்சிமுறையை மாறிமாறி ஆட்சி செய்யும் சிங்கள அரசுகள் தொடர்ந்தும் கடைப்பிடித்துவருவதால், கல்வி என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. உலக உதவி நிறுவனங்கள் பல்வேறு வகையான உதவிகளை மாணவர்களின் வளர்ச்சிக்குச் செய்துவருகின்றபோதும், அது சிங்கள மாணவர்களின் வாழ்வுக்கும், தமிழ் மாணவர்களின் அழிப்பிற்கும் பயன்படுத்தப்படுவது இன்றும் தொடர்கிறது.

'எல்லோர்க்கும் கல்வி, கல்வியில சம வாய்ப்பு' என்ற ஐ.நா. சபையின் கோட்பாட்டுக்கு மாறாக இலங்கை அரசு கடைப்பிடித்துவரும் இனவாதப் போக்குகள் தமிழ் மாணவர்களுக்குப் பொருந்தாக் கொள்கையாகவே உள்ளன. கல்வியில் பண்பு ரீதியாகவும் அளவு ரீதியாகவும் அடைவினைப் பெறமுடியாததுடன், தமிழ் பேசும் மாணவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களுடைய கல்வியானது, மரங்களின் கீழும், ஓட்டைக் கொட்டில்களிலும், வீதியோரங்களிலும் புழுதிபடியத் தம் கல்வியைக் கற்கவேண்டியுள்ளது. 'எல்லோருக்கும் கல்வி' என்று கூறும் உலகம், எம் பிள்ளைகளிற்கான தடையை உணர்ந்து கொள்ளாமல் இருப்பது வேதனை தரும் விடயமாக உள்ளது. கற்றலுக்கான உபகரணங்கள் இன்றி, துணைச் சாதனங்கள் இன்றி கற்கின்ற கல்வி கூட, முழுமையடையமுடியாத நிலை காணப்படுகின்றது. திட்டமிட்ட சிங்கள அரசின், மாணவர் மீதான வன்முறை வடிவத்தை உலகம் என்று உணர்ந்துகொள்கிறதோ அன்றே தமிழ் மாணவர்கள் தலை நிமிர்வார்கள்.

முறைசார்ந்த பள்ளிக் கல்வியை முடித்துக்கொண்டவர்களில் ஐந்து வீத மாணவர்கள் மட்டுமே உயர் கல்வி வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதுடன், ஏனையோர் அதற்கான சந்தர்ப்பத்தினை இழந்துவிடுகின்றனர். வேலைவாய்ப்புகள், கற்றகல்விக்கு இல்லாமல் இருப்பதுடன், தொழில்சார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வதற்கான சந்தர்ப்பங்களும் மறுக்கப்படுகின்றன. பாடசாலைகளில் நீண்டகாலமாக இருந்து வருகின்ற ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்காது தொடரவிடுவதுடன் ஆசிரியர் தேவையில் 50 வீதமான தொண்டர் ஆசிரியர்கள் சேவையினை வழங்குகின்ற போதும், அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதிலும் அரசு பாராமுகம் காட்டுகிறது. மேலும் உரிய காலங்களில் தமிழ் மாணவர்களுக்கான பாடநூல்கள் கிடைக்காமல் இருப்பதும் அவற்றில் வரலாற்றுத் திரிபுகளும், அச்சுப் பிழைகளும், மொழிப் பிழைகளும் பெருமளவிற்காணப்படுவது தமிழ் மாணவர்களின் கல்வியை திட்டமிட்டுச் சீரழிக்கும் செயல்களேயாகும்.

ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட தமிழ் மாணவர்கள் மீதான நடவடிக்கைகளால் சீற்றம் கொண்ட மாணவர்கள், பொங்குதமிழ் எழுச்சியினூடாக அரசுக்கும், சர்வதேச உலகிற்கும் தங்களது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். மாணவர் சக்தி மதிக்கப்பட வேண்டும் என்பதுடன், எங்களது கல்வியை நாங்களே தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இதனூடாக எமது தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்பன மதிக்கப்பட்டு அனைத்து மாணவர் சக்தியாலும் வலியுறுத்தப்படுகின்றது. கல்விச் சமூகத்தினர் எமது தலைமுறையை வளர்க்கின்ற போது எங்கள் மீதான புறக்கணிப்பு என்பது அழிக்கப்படும். தமிழ் மாணவர்கள் ஒன்று படுவதனூடாக மாணவர்களின் தேவைகள் நிறைவடைவதுடன், தமிழர் தாயகம், தன்னாட்சி உரிமை கண்டுவிடும்.

- என்று அதில் உள்ளது.(எ-8-12)

---

பயிர்களைப் பாதுகாக்க

# விவசாயிகளுக்கு மீண்டும் துப்பாக்கிகள் வழங்கப்படும்.

## என்கிறார் விவசாய அமைச்சர்

கொழும்பு,ஜூன்7

விவசாயிகளுக்கு மீண்டும் துப்பாக்கிகளை வைத்திருந்து பயன்படுத்த அனுமதி வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

விவசாய நிலங்களில் விளைந்த பயிர்களைக் காட்டு மிருகங்கள் - குறிப்பாக காட்டுப்பன்றிகள் அழிக்காமல் பாதுகாப்பதே தமது முக்கிய பிரச்சினையாக உள்ளதாக விசாயிகள் முறையிட்டுள்ளதாகவும் - இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சகத்துடன் தான் தொடர்புகொண்டு விவசாயிகளுக்கு வேட்டைத் துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் - விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்குவதற்கு ஏற்றவகையில் புதிய உப-விதி ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியல் வாதிகளுக்கு அவர்களது பாதுகாப்புக்கென முன்னர் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மீளப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலையில் விவசாயிகளுக்குத் துப்பாக்கிகளை வழங்க இருப்பது முரண்பாடுகளை உருவாக்கும் என்று கருதப்படுகிறது. (ஒ)

---

# யாழ்.மணிக்கூண்டு கோபுரத்துக்கு கடிகாரங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ் மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்துவதற்காக பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட நான்கு கடிகாரங்களும் நேற்று யாழ்நகருக்கு விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்நகரின் பிரதான நிலக்குறியீடுகளில் ஒன்றான இந்த மணிக்கூண்டுக் கோபுரம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் கோபுரம் கடுஞ்சேதத்திற்குள்ளாகியிருந்தது. அதனை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது அப்பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்ததையடுத்து கோபுரத்தின் நான்கு முகப்புகளிலும் பொருத்துவதற்கென பிரிட்டிஷ அரசு 4 கடிகாரங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. விசேட விமானத்தில் எடுத்துவரப்பட்ட அவற்றை பொருத்த தொழில்நுட்பவியலாளர் குழு ஒன்றும் யாழ். வந்துள்ளது.

புனரமைக்கப்பட்ட இந்த மணிக்கூண்டுக் கோபுரத்தின் திறப்பு விழா விரைவில் நடைபெற ஏற்பாடகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஓ-ரி)

---

# கோழித்தீன் விலையை குறைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் கோழித்தீன் உற்பத்தியை அதிகரிக்கும் அதேநேரம் அதன் விலையையும் குறைப்பதற்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கடந்த காலங்களில் மாதம் ஒன்றுக்கு 15ஆயிரம் கிலோ கோழித்தீனை உறபத்தி செய்து வந்தது. எனினும் தற்போது அதன் உற்பத்தியை மாதம் 50ஆயிரம் கிலோவாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதேநேரம் விலையையும் குறைத்து விற்பனை செய்யவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

தென்னிலங்கையில் இருந்து கோழித்தீன் தற்போது வருவதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் கோழித்தீனின் விற்பனை அளவு குறைவாகவே உள்ளன. இந்த நிலையை மாற்றி கோழித்தீனின் தரத்தை உயர்த்தி விற்பனையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ஒ-12)

---

# கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் கவர்ந்த சிவா

## தலைவர்கள் கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூன்7

கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் கவர்ந்த தலைவர் எம்.சிவசிதம்பரம்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவரும், தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியுமான எம். சிவசிதம்பரத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுக்கப்பட்ட செய்திக் குறிப்புகளில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியற் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலரும் அனுதாபச் செய்திக் குறிப்புக்களை விடுத்துள்ளனர்.

அவை வருமாறு:-

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**(ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி)**

தமிழ் மக்களுக்கு தமிழ் அரசியற் களத்திலும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் சேவையாற்றிய மூத்த தமிழ் அரசியற் தலைவர் மு.சிவசிதம்பரம். அவர்களின் மறைவானது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஆக்கபூர்வமான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்சூழ்நிலையில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உறுதியாகவும் - தெளிவாகவும் - நாடாளுமன்றத்தில் முன்வைக்கக்கூடிய தலைவர் சிவசிதம்பரத்தின் மறைவானது துரதிர்ஷ்டமானது.

ஆரம்பத்தில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் தலைமைத்துவத்தின் கீழும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தின் கீழும் இருந்து செயற்பட்ட அமரர் சிவசிதம்பரம் மிக நீண்டகாலமாக கூட்டணியின் தலைவராகவும் இருந்தார். தமிழ் மக்கள் பிரிந்து நிற்காமல் ஓரணியில் திரளவேண்டிய அன்றைய காலத்தின் தேவையை அறிந்து தந்தை செல்வா, அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமரர் தொண்டமான் ஆகியோர் தமிழர் கூட்டணியை உருவாக்கியபோது அதற்கு உறுதுணையாக இருந்தவர்களில் மு.சிவசிதம்பரமும் ஒருவராவார்.

அதேபோல், தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்று முக்கியமானது என்பதையும், தமிழ்க் கட்சிகள் ஒரே குரலில் பேச வேண்டும் என்பதையும் சென்னையில் அவருடன் நடத்திய பல சந்திப்புக்களின்போது அவர் என்னிடம் வலியுறுத்தியிருந்தார். அவரின் விருப்பம் போலவே இதுவரைகாலமும் பிரிந்திருந்த தமிழ் அமைப்புகள் ஒன்றாகி, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து, ஒரு தீர்வை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் சூழலில் சிவசிதம்பரம் அவர்களின் மறைவு தமிழ் மிதவாத அரசியலில் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவித்துள்ளது.

**மா.க.ஈழவேந்தன்**
**(தமிழீழ விடுதலை அணி)**

களத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுகையில், நாடாளுமன்றத்தில் எம்மினத்தின் சார்பில் குரல் எழுப்ப நேர்மையும், பொறுப்புணர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்ற தலைவர்கள் தேவை. உடல் தளர்ந்து அகவை 78 அடைந்த நிலையிலும் உள்ள உறுதியுடன் ஈழத்தமிழர்களுக்காக இறுதிவரை நாடாளுமன்றத்திலும் மற்றைய பொது இடங்களிலும் தன்கே உரிய கம்பீரக் குரலில் ஓங்கிக் குரல் எழுப்பியவர் சிவசிதம்பரம்.

ஈழத் தமிழ் இனத்தின் முழு நம்பிக்கைக்குரிய பேராளர்கள் - ஏகப் பிரதிநிதிகள் - தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதை சிவசிதம்பரம் எதுவித தயக்கமும் இன்றி எடுத்துரைத்தவர். இந்தத் தெளிவான கருத்தைத் தமிழ் ஊடகங்கள் வாழ்த்தின. ஆனால் அதேவேளையில், சிங்கள ஊடகங்கள் அவர் மீது சீறிப் பாய்ந்தன. வாழ்த்துதலையும், தூற்றுதலையும் ஒரே நிலையில் வைத்து தனக்கே உரிய புன்முறுவல் பூத்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இட்ட கட்டளையை தம்மால் இயன்றளவு நிறைவேற்ற முயன்ற ஒரு பெருந்தலைவர். மாற்றாரும் மதித்துப் போற்றும் தலைவர் சிவசிதம்பரம் என்பதை அனைவரும் ஏற்பர்.

**த.சுபத்திரன்**
**(ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி)**

1950களில் தனது அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்த சிவசிதம்பரம், தனது இறுதி மூச்சுவரை தமிழர்களின் விடிவிற்காக அயராது பாடுபட்டார். 1960களின் முற்பகுதியில் நடைபெற்ற சத்தியாக்கிரக இயக்கத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் அங்கத்துவம் வகித்த இவர், தமிழரசுக் கட்சியுடன் இணைந்து அதில் பங்குபற்றினார்.

1970களில் இனமுரண்பாடு தீவிரமடைந்தபோது வடக்கு - கிழக்கில் தனது கனல்கக்கும் பேச்சுக்களால் மக்களை ஆகர்சித்தவர் இவர். சட்டப்புலமை மிக்க இவர், நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான ஆழமான உரைகளை ஆற்றியுள்ளார். 1980களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்காகவும் இவர் வாதாடினார்.

**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து நீண்ட பரீட்சயம் கொண்டவர் எம். சிவசிதம்பரம்.

1970 ஆம், 1977 ஆம் ஆண்டுகளில் தமிழர் பிரச்சினை தீவிரமடைப்படுத்தப் பட்டபோது அ.அமிர்தலிங்கத்துடன் சக தலைவராக நின்று அவை குறிதத நடவடிக்கைகளில் முனைப்புடன் செயற்பட்டவர் சிவசிதம்பரம்.

பதவிமோகமற்றவராக விளங்கிய இவர், அரசியலில் ஈடுபட்டதன் காரணமாக தனது சொத்து அனைத்தையும் இழந்தார். மிகுந்த அரசியல் ஞானம் உடைய இவர், நாடாளுமன்றில் தமிழர் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்தார். அரசியல் நேர்மை மிக்கவரான சிவசிதம்பரத்தின் வரலாறு தமிழர் வரலாற்றில் மறக்கப்படாதிருத்தல் வேண்டும். (எ-8)

---

### வன்னியிலிருந்து மேலதிக சிகிச்சைக்கு நால்வர் வருகை

யாழ்ப்பாணம்,ஜூன்7

மல்லாவி வைத்தியசாலையில் இருந்து நேற்றுமுன்தினம் நான்கு நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மல்லாவியைச் சேர்ந்த ஸ்ரீரங்கம் நகுலேஸ்வரன்(வயது 32), துணுககாயைச் சேர்ந்த தேவசகாயம் விஸ்வநாதன்(வயது 27), அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரை சிங்கராஜா(வயது 72), இராமநாதபுரத்தைச் சேர்ந்த வி.பெருமாள்(வயது 69) ஆகியோரே இவ்வாறு அழைத்துவரப்பட்டுள்ளனர். (எ-12)

---

# அரசியற்றுறைப் பொறுப்பாளர் யாழ்.வணிகருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

யாழ். வணிகர்கழக பணிமனையில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களினதும் உரிமையாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணம் வணிகர்கழகம் கேட்டுள்ளது.(ஒ-6)

## ...டம் வழங்கிக் கௌரவிப்பு

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள இந்து ஆலயங்களில் சர்வசாதகராக விளங்கி வேதாகமமுறையில் கிரியைகளை நெறிப்படுத்திப் புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ சேது மாதவ ஐயர் சிவபாலசர்மாவுக்கு 'வேதாகம சாதக பூஷணம்' என்னும் சிறப்பு பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடை பெற்ற போது சிவபாலசர்மாவுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது. (ம-152)


## தவறிவிட்டது

குருநாதசிவம் ரமேஸ்குமார் - 772841655V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, பளைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 2567
குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில். (4585)

வடமராட்சியில்......
மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி
இலங்கைப் போக்குவரத்துச் சபை (தேசிய அணி)
எதிர்
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி
08.06.2002 சனி பி.ப. 4.00 மணி
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கு.
அனுமதி: ரூபா 10/=
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்
விளம்பர அன்பளிப்பு:
ஹப்பி ரெக்ஸ் & மாருதி கொமினிக்கேசன்
பிரதான வீதி - நெல்லியடி. (C/22418)



## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியர் மா.திருச்செல்வம் (குட்டி)
அவர்களின் அன்புத் தந்தையார்
இலகுப்பிள்ளை மார்க்கண்டு
அவர்கள் காலமானதையிட்டு கவலையுறும் அன்னாரின் குடும்பத்தவர்களுடன் நாமும் துயர்பகிர்கின்றோம்.
'உதயன்' பணிமனை,
யாழ்ப்பாணம். (C/22421) - சக ஊழியர்கள்.


# திருப்பதிகங்களை பாடி இறையருள் பெறுவோம்



எங்கும் எதிலும் நிறைந்திருக்கும் பரம்பொருளைப் போற்றி 'அன்பே சிவம்' என்னும் நெறியைத் துணை கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்கள் சைவர்கள். நம் முன்னவர் போற்றிய சைவத்தின் தொன்மையை தொல்லியல் ஆராய்ச்சியாளராலும் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. இது சைவத்துக்குக் கிடைத்த பெருமையாகும். சிவம் என்னும் பரம்பொருள் தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை. தோன்றாத் துணையாய் இருந்து ஆக்கி எவையும் நல்கி ஈற்றில் புகலிடம் தரும். 'சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை. அவனொடு ஒப்பார் இங்குயாருமில்லை' என்பது திருமூலர் திருவாக்கு.

'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி' எனப் புகழும் திருவாசகச் செய்யுளும், 'உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்' என போற்றும் சேக்கிழார் மொழியும், 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என்றோதும் அப்பர் திருவாக்கும், 'காரணனாகித் தானே கருணையால் எவையும் நல்கி, ஆருயிர் முழுதும் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும் பூரண முதல்வன்' என்றுரைக்கும் கச்சியப்பரின் அருள் சொல்லும் 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொருபாகனார் தாம் வருவார்' எனச் செப்பும் சிவஞானசித்தியார் பாடலும், சிவனின் சிறப்பை - தனித்துவத்தை- ஏகதலைவன் எனும் பேருண்மையை- எடுத்தியம்புகின்றன.

ஏக தலைவனாய், அருமருந்தாய நின்றருளும் சிவனை சிந்தையுள் இருத்தி 'சிவாயநமவென சிந்திப்பார்க்கு அபாயம் ஒருபோதும் ஏற்படாது' என்பது ஔவையின் மொழி. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்றோதிய அப்பர் சுவாமிகள் 'படைக் கலமாகவுன்னாமத்தெழுத்து அஞ்சும் என் நாவிற் கொண்டேன். அதனால், அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை' என அஞ்சாதிருக்க வழிகாட்டியவர்.

வாக்கால், மனத்தால் எண்ணி உணர்ந்து அவனருளை நோக்கி நிற்கும் நுண்ணறிவு பெற்றுய்யும் நெறியைக் கொண்டால் இறையருள் எவர்க்கும் எளிதில் கிடைக்கும். முதலில் சினம் இறக்கக் கற்கவேண்டும். சித்திகள் யாவும் கைவரப் பெற்றாலும் மனம் இறக்கும் மாற்றத்தைத் தேடவேண்டும். வஞ்சனையும் பொய்யும் உள்ளே வைத்து அழுக்காறாயுளறும் நிலைமாறி நெஞ்சு நிர்மலமாகி நிலைத்திருக்கவேண்டும்.

இறைவன் கழல்காண தூய வழிகள் பலவற்றை சித்தர்களும் சமய குரவர்களும் அருளிப்போயுள்ளனர்.

'உடம்பு எனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம் படு ஞானத்தீயால் எரிகொள
இருந்து நோக்கில்
கடம்பமவர் காளை தாதை
கழலடி காணலாமே'.

வெந்துவிழும் உடற்பிறவியை மெய்யென நம்பி வெறும் காற்றடித்தபை போன்ற இந்த உடம்பின் உள்ளத்தை சட்டியாக்கி உணர்வுகளை நெய்யாக்கி, உயிரைத் திரியாக்கி, ஞானத்தீயை ஏற்றி துதித்தால், இறைபதம் கிடைக்கும் என்பதை அப்பர் தேவாரம் செப்புகின்றது.

**கந்த. தியாகராசா**

முப்போதும் வானோரும் முடி சாய்த்து தொழும் கோணிய பிறை சூடிய பிஞ்ஞகப் பித்தனை பிறப்பிலியை அரவாடச் சடை தாழ அங்கையில் அனல் ஏந்தி ஆடும் அரனை பணிவார்க்கு எஞ்ஞான்றும் இடர் நேராது. தாயினும் நல்ல தலைவனாய நோயிலும் பிணியிலும் காத்தும் எல்லாம் மீதும் பரிவு காட்டி உதவுவதில் தாயை விட மேலான தலைவனைப் போற்றுவார் பேறுடையவரே.

அன்றலர்ந்த மலர் கொய்து நித்தலும் எம்பிரானுடைய கோயில் நண்ணி, புலர்வதின் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்துபாடி தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி துதிக்க வேண்டும். நல்லதே நினைத்து, நல்லதே பேசி, நல்லதே செய்யின் நாடியவை கை கூடும். இறைபணி செய்து இறை இன்பத்துள் மூழ்கி நிறைகாண விளையும் கோடிக்கணக்கானவர்க்கு கொடுத்தாலும் குறையாத அன்பு தெவிட்டாதது, அமிர்தம் போல் சுவையானது. அருமை பெருமை மிக்க எங்கள் மதம் அன்பைப் போதிப்பது, தர்மத்துக்கு வழி காட்டும் ஒளி விளக்கானது. ஆன்மீகப் பயிரை வளர்த்து ஆனந்தத்தை எவர்க்கும் ஊட்ட வல்லது: அத்தகைய சிறந்த மதத்தைப் போற்றி இறை இன்பம்காண இறை நாமத்தை உச்சரித்து தேவார திருவாசகப் பதிகங்களை ஓதி உய்தி பெறுவோமாக!

"எங்கும் வேண்டும் இன்ப அன்பு"


**ஞானக்கதிர்**

## திறப்பு விழா

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் பழைய மாணவர்களின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்ட சிறுவர் பூங்கா எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசன் முதன்மை விருந்தினராகவும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நாசத்தியநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(எ-117)


# புங்குடுதீவு - பெருங்காடு
## அருள்மிகு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி தேவஸ்தான
## புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



காலம் : 07.06.2002 வெள்ளிக்கிழமை
நேரம் : 11.56 மணி தொடக்கம் 12.37 மணிவரை

வைகாசி மாதம் 24ஆம் திகதி (07.06.2002) வெள்ளிக்கிழமை

காலை 6~00 மணிக்கு ~ புண்ணியாவாசனம், யாக பூசை, ஹோமம், அக்கினி சம்யோஜனம், பூர்ணாகுதி, அந்தர் பலி, பகிர் பலி, யாக தீபாராதனை, புஸ்பாஞ்சலி, வேதபாராயணம், ஸ்தோத்திர பாராயணம், ஆசீர்வாதம், திராவிட ஸ்தோத்திரம், காலை 11.56 ~ 12~37 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகள், மஹா கும்பாபிஷேகம், மஹா ஹவிர் நிவேதனம் தீபாராதனை, மங்கள தர்சனம் கோதர்ஷனம், எஜமான் அபிஷேகம், ஆசியுரை, மஹா அபிஷேகம் தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.

மாலை 5.00 மணிக்கு ~ சாயரட்சை உற்சவ மூர்த்திக்கு விசேட பூஜை, வீதியுலா, பிரசாதம் வழங்கல்.

❊ தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும். ❊

"வேல் இருக்க வினையில்லை மயில் இருக்க பயமில்லை"

இந்நிகழ்வு யாழ்.சேவையில் 11.00 மணி தொடக்கம் 1.30 மணிவரை ஒலிபரப்பப்படும்.

புங்குடுதீவு. (4581) ~ ஆலய பரிபாலன சபை.

## பெண்களுக்கான பாசறை குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்7

மக்கள் நலன்புரிச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளுக்கு கல்வித் திணைக்கள அனுசரணையுடன் நடைபெறவுள்ள பயிற்சி பாசறை தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளின் வீதி ஒழுங்கு மற்றும் முதலுதவி மாணவிகளின் அணித்தலைவிகள், பயிற்சிப் பாசறையில் பங்கேற்கும் 15 மாணவிகளின் பெயர்ப்பட்டியலுடன் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-ரி)


BECON
யாழ்நகர்.
External Degree
B.A. Part I & II
எமது விரிவுரையாளர்கள் குழு
Eco. : திரு.விக்கி
மெய்யியல், அளவையியல்: திரு.S.S.மனோகரன்
Tam.: செல்வி பங்கையற்செல்வி
Hin. Cul. : திரு. M.R.
Pol. Sc. : திரு.கேதீஸ்வரன்
Chr. : செல்வி துவாரகா
Geo. / Env. : திரு.S.R.பாலா
ஆரம்பம்: 08.06.2002 சனி 9 மணி
(4593)


## சமய சந்நிதிகளில்

காரைநகர்,ஜூன்7

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12.30 மணிக்கு நடைபெற உள்ளது.

மகா கும்பாபிஷேக ஆரம்பக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாக உள்ளன. 12ஆம திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பகதர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று மறுநாள் நண்பகல் 12.30 மணிக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். (ஒ-73)

★ ★ ★

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5.30மணிக்கு நற்கருணை வழிபாடும், 16ஆம் திகதி காலை 7.15 மணிக்கு யாழ். ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப்பவனியும் இடம்பெறும்.

இன்றைய வழிபாடுகளை அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்பணி ஏ.ஜீவேந்திராப் போல் நிகழ்த்துவார். (எ-8-ரி)

★ ★ ★

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்த உற்சவத்தின் உறுதி பூசுதல் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் யாழ்.ஆயர் அருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு உறுதிபூசுதலை வழங்குவார்.

எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை திருச்சொரூபப் பவனி இடம்பெறும். மறுநாள் 13ஆம் திகதி வியாழகிழமை காலை திருநாள் திருப்பலியுடன் வருடாந்த உற்சவம் நிறைவுறும். (ம-173)

★ ★ ★

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நவநாள் ஆராதனையைத் தொடர்ந்து எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை திருச்சொரூபப் பவனி இடம்பெறும். மறுநாள் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் வருடாந்த உற்சவம் நிறைவுறும். (ம-173)

★ ★ ★

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இக்கும்பாபிஷேகத்தை சிவப்பிரம்மஸ்ரீ இரா.இரத்தினசபாபதிக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து நடத்தி வைப்பார். (ம-173)

★ ★ ★

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலய தேர் உற்சவம் நாளை சனிக்கிழமை காலை பத்து மணிக்கும், தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 9 மணிக்கும் இடம்பெறவிருக்கின்றன. (எ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் நடக்கும் ஹொக்கிச் சுற்றுப்போட்டி இன்று பலகலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 3.30 மணிக்கு - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

★ மாலை 4.30 மணிக்கு - கரவெட்டி வி.கழக அணி எதிர் உடற்கல்விப்பிரிவு அணி. (ம-ரி)

✪ ✪ ✪

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் பருத்தித்துறை திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் நடத்தி வரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை திக்கம் இளைஞர் வி.கழகத்தை எதிர்த்து கம்பர்மலை கழுகுகள் வி.கழகம் மோதுகின்றது. (ம-ரி)

✪ ✪ ✪

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஏற்பாடு செய்துள்ள உதைபந்தாட்ட போட்டி நாளை நெல்லியடி மத்திய மகா வித்தியால மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட அணியை எதிர்த்து இலங்கைப் போக்குவரத்து சபையின் தேசிய அணி மோதவுள்ளது. (ம-13)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா, ரகுவரன் மற்றும் பலர் நடித்த
பாட்ஷா
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22357)



G.A.Q. யாழ்., பேராதனை
B.A. PART I, B.A. Final
விரிவுரைகள் 01-06-2002இல் ஆரம்பமாகிவிட்டன.
விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.
விவரங்களுக்கு: S.அருள்நங்கை (4583)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.



ராஜா யாழ்ப்பாணம்.
இன்றுமுதல்
விஜயகாந்த், லைலா, மணிவண்ணன்
கள்ளழகர்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/22358)



யாழ். - கொழும்பு
வவுனியா, திருமலை ஆகிய இடங்களுக்கு பிரயாணம் செய்பவர்கள் ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளலாம்.
தொடர்பு: செல்வம் ஸ்ரோர்ஸ்,
330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No. - 021-3605
(C/22428)



நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 22 - 02 - 1948

மறைவு 08 - 05 - 2002

### திருமதி பத்மேஸ்வரி விக்னேஸ்வரன்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உத்தமியே!
எந்நாளும் உம் நினைவு எங்களை விட்டு அகலாது
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.06.2002) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*நாவலடி, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.* (C/22427) - குடும்பத்தினர்.



ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

"ஓம் நமோ நாராயணாய"

## அருள்மிகு ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோயில்

வட்டக்கச்சி - கிளிநொச்சி



## புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

### 13-06-2002 வியாழக்கிழமை

*பக்தப் பெருமக்களே!*

இலங்கை மணி நாட்டின் வடபகுதியின் தானியப்பெட்டகமாய் இயற்கை வளமும், இறைவழிபாடும், இன்தமிழ் வளர்ச்சியும் பொலிந்து சிறப்புறும் கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் மம்மில் குளக்கரையில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் மங்களமிகு சித்திரபானு வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் (13.06.2002) வியாழக்கிழமை புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும், திருதியை திதியும் கூடிய சுபநேரம் காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையுள்ள சிம்ம லக்ன சுபமுகூர்த்தத்தில் குடமுழுக்குப் பெருவிழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### கிரியா கால விவரம்

| | | | |
|---|---|---|---|
| 09.06.2002 | - | ஞாயிற்றுக்கிழமை | : விஷ்னு, கணபதி வழிபாடு, கர்மாரம்பம் முதலியன |
| 11.06.2002 | - | செவ்வாய்க்கிழமை | : யாகாரம்பம், தீபாராதனை |
| 12.06.2002 | - | புதன்கிழமை | : காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை **எண்ணெய்க்காப்பு** |
| 13.06.2002 | - | வியாழக்கிழமை | : 10.30 தூபி அபிஷேகம், 11.00 மணி - மஹா கும்பாபிஷேகம் |

*விஷேட பூஜையும் அன்னதானமும் இடம்பெறும்.*

பிரதிஷ்டா பிரதமகுரு: முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் *(கதிரைமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)*

அனைவரும் கலந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருள்பெறுவீர்களாக.

பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்து போய் அதர்மம் தலை தூக்குமோ
அப்போது தர்மத்தை நிலைநாட்டவும்
அதர்மத்தை அழிக்கவும் நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன்.
- கீதையில் கண்ணன்.





கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!

"ஓம் தத் சத்"

பரிபாலன சபையினரும் பொதுப் பணிமன்றமும்.

(4606)


BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
பிரிவு 4
சரளமாக உரையாட
சிங்களம்
சிங்கள விரிவுரையாளர்
By: லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்: 08.06.02 Sat. 1.30 p.m.
(4553)



எமது புதிய வெளியீடு
பிரபுதேவா, ராஜசுந்தரம், ஜோதிகா நடித்த
123
விக்ரம், மும்தாஜ், லாரன்ஸ் நடித்த
விக்கி
யாவும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது.
வீடியோ ஆனந் ஸ்ருடியோ
யாழ். வீதி, மானிப்பாய்.
(C/22425)



G.A.Q., B.A. Part I
B.A. - Final
எழுதுவினைஞர்
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
ஆரம்.: 08.06.02 காலை 8 மணி
நியூட்டன்
உயர் கல்வி நிறுவனம்
ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்.
(4604)

## ... நாளை இந்தியாவுக்கு

உத்தியோகபூர்வமாக ஐந்து நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சனிக்கிழமை இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

## கடைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதம் வீதியூடாக கல்வியங்காட்டுச் சந்தியைச் சென்றடையும். பின்பு பருத்தித்துறை வீதியூடாக வல்லைச் சந்தியைச் சென்றடையும். அங்கிருந்து குஞ்சர்கடையடிச் சந்தி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மந்திகை, மாலிசந்தி, நெல்லியடி ஆகிய இடங்கள் ஊடாக கரவெட்டியைச் சென்றடையவுள்ளது.

கரவெட்டியில் உள்ள அமரரின் இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து அருகில் உள்ள திறந்த வெளியிலும் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுகளில் குடாநாட்டின் மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு தமது அஞ்சலிகளைச் செலுத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

## மாணவர் எழுச்சிதின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்ட சின்னங்களை மாணவர்கள் அணிந்திருந்தனர்.

யாழ்.மத்திய கல்லூரியில் நிகழ்வுகள் காலை 10.15 மணியளவில் ஆரம்பமானது. முதலில் யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளா இ.இராஜகோபால் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழத் தேசிய கொடியினை யாழ்.மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவைச் சேர்ந்த தமிழ்விழி ஏற்றிவைத்தார்.

குடாநாட்டின் ஏனைய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும் எழுச்சி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

யாழ்.பல்கலைக்கழகத்திலும், பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒன்றியத் தலைவர் கே.பரணீதரன் தலைமையில் எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 10.15 மணியளவில் பல்கலை முன்றிலில் இடம்பெற்ற அக வணக்கத்தை தொடர்ந்து கைலாசபதி கலையரங்கில் எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முன்னதாக பல்கலை முன்றிலில புலிக்கொடியை புலிகளின் அரசியல் துறை பிரமுகர் பாப்பா ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது.

கலையரங்கில் எழுச்சியுரைகள், நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்திலும், வன்னிப் பெருநிலப்பரப்பிலும் மாணவர் தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (ம-8-9-10-11-12-31-173-117)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எஸ் தேவானந்தா, கட்சி ஆலோசகர் விக்கினேஸ்வரன் மற்றும் யாழ்மாவட்ட பொறுப்பாளர் ஜெகன் ஆகியோர் சகிதமசென்று அஞ்சலி செலுததினார்.

பெரும் எண்ணிக்கையான அரசியல்வாதிகளும் ராஜதந்திரிகளும் பொதுமக்களும் நேற்று அஞ்சலி செலுத்தினர். (ம-3)

## மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், கண்காணிப்புக்குழு உறுப்பினர் அருட்திரு. ஞானரத்தினம் ஆகியோர் உட்பட பல பொது.அமைப்புக்களின் பிரதிநிதிகளும் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.

இந்தப் போராட்டம் காரணமாக யாழ்.செயலக மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். பணிகள் யாவும் ஸ்தம்பித்தன.

இன்று தமது போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்றும் -

நாளையும் நாளை மறுதினமும் போராட்டம் இடைநிறுத்தப்படும் என்றும் -

அதற்குள் சரியான பதிலை அரசு தராதபட்சத்தில் போராட்டம் ஏனைய இடங்களுககும் விஸ்தரிக்கப்படும் என்றும் - சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ம-3-4-8-12-51-173)

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாணவர்கள் பங்குபற்றினர்.

தம்பிலுவிலில் நடந்த பொதுக் கூட்டத்திலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

அங்கு கரிகாலன் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

யுத்தநிறுத்தத்தை நாம் முறைப்படி அவதானமாகக் கடைப்பிடித்து வருகின்றோம். எம்மைச் சீண்டும் வகையில் படையினர் செயற்பட்டு வருகின்றனர். எமது போராளிகளைக் கைது செய்வது, சித்திரவதை செய்வது என எமக்கு எதிராகப் படையினர் செயற்பட்டு வருகின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் இலக்கை அடைவதற்கு நாம் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். சமாதானத்தைக் கொண்டுவர முழு நம்பிக்கையுடன் செயற்படுகின்றோம்.

இந்த உடன்படிக்கையில் சில திருத்தங்களைக் கொண்டு வர அரசு முயற்சி செய்கின்றது. அதற்காக உடன்படிக்கையில் உள்ள விடயங்களை நிறைவேற்றாமல் அரசு இழுத்தடித்து வருகின்றது.

உத்தேச பேச்சை ஆரம்பிப்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இந்தப் பேச்சைக் குழப்ப அரசு முனைந்து செயற்பட்டால் பாரிய யுத்தம் வெடிப்பதைத் தவிர்க்கமுடியாது. இதனால் பாரிய சேதம் ஏற்படும்.

சவப்பெட்டி எச்சரிக்கையை படையினர் விடுத்துவருகின்றனர். கடந்த காலங்களில் சவப்பெட்டிகளை நாம் தான் படையினருக்கு அனுப்பியுள்ளோம். இன்று நாம் சமாதானத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சவப்பெட்டி பற்றிப் பேசினால் சமாதானம் புதைகுழிக்குள் தான் செல்லும் - என்றார். (ம-3-10-ரி)

## சிவாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் மேலவனும் அஞ்சலியுரை நிகழ்த்துவர்.

அதன் பின்னர் வாகன அணியாக யாழ்நோக்கி எடுத்துவரும் புகழுடலை விளக்குவைத்த குளத்தில் விடுதலைப் புலிகள் பொறுப்பேற்பர்.

கிளிநொச்சியில் இரு மணிநேரம் வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்துவர். அதன் பின்னர் முகமாலை ஊடாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் புகழுடல் ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைககப்படும்.

நாளை நண்பகல்வரை அங்கு பொதுமக்கள், தலைவர் சிவாவுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தலாம். பின்னர் பொதுமக்கள் அஞ்சலிக்காக கரவெட்டியில் உள்ள சிவாவின் இல்லத்திலும் பூதவுடல் வைக்கப்படும்.

மறுநாள் காலை சமயக்கிரியைகள் முடிவடைந்த பின்னர் கரவெட்டி அத்துளு நீத்திட்டப் பகுதியில் உள்ள திறந்த வெளியில் முற்பகல் 11 மணிக்கு அஞ்சலி உரைகள் இடம்பெறும். அதன்பின்னர் சோனப்பு மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுவதற்காக அமரரின் மனைவி, மகள் ஆகியோர் இந்தியாவிலிருந்து நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர். அவரது மகன் லண்டனில் இருந்து கொழும்புக்கு இன்று வருவார்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும், உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.ஜனார்த்தனனும் நேற்று இந்தியாவிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்தனர். (ம-3)


# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*பணிநிலை:* அலுவலர் (பயிலுநர்)/கணக்காய்வாளர் (பயிலுநர்)

*தகைமை:* ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் வணிக/முகாமைத்துவப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் H.N.D.A. கற்கைநெறியில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்:* 3200 + 2500

*அகவை எல்லை:* 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிநிலை வேண்டுகை" எனக் குறிப்பிடப்பட்டு 2002.06.12ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும், யாழ்.குடாநாட்டில் இயங்கும் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலாளர்,
ஆளுகை,
நடுவப் பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

*குறிப்பு:* நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை தபாலில் நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.
யாழ்.குடாநாட்டு வேண்டுகையர்கள் யாழ்.குடாநாட்டு பணிமனை ஊடாக அனுப்பி வைக்கலாம்.
(சி-22420)

# தமிழீழ வைப்பக அறிவித்தல்

அன்புக்குரிய வழமையாளர்களே,

- 1996.04.19ஆம் நாளுக்கு முன்னர் தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகையடைவுக் கடன் பெற்று இன்றுவரை அவற்றை மீட்காதவர்கள் தங்கள் அடைவு நகைகளை, முற்பணத்தொகையினையும் 1996.04.19ஆம் நாள் வரைக்குமான வட்டித்தொகையினையும் மட்டும் செலுத்தி மீளப்பெற்றுக் கொள்ளுதல்.
- தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் உள்ள தங்கள் வைப்பகக் கணக்குகளை 1996.04.19ஆம் நாளுக்குப் பின்னர் செயற்படுத்தாதவர்கள் கணக்குகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- தமிழீழ வைப்பகப் பணி பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆகிய நோக்கங்களுக்காகப் பொற்பதி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் ஏழல்தோறும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வைப்பக அலுவலரைத் தொடர்புகொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மேலாளர்,
(ஆளுகை)
நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம்.
(சி-22419)

# தமிழீழ வைப்பகம்
# BANK OF TAMILEELAM

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

VICKNAA VICKNAA VICKNAA VICKKNA VICKNAA VICKNAA VICKKNA

## பிரிவு 2
**A/L 2004**
கணக்கீடு
**BALAVASAN**
(B.B.A. (F.M. Spl.)
Sat., Sun. 9-10 a.m.
ஆரம்பம்:
08.06.2002 Sat. 9 a.m.
O/L இல் கணக்கீட்டு அறிவினைப் பெறாத மாணவர்களுக்கான பிரிவு.
(4600)

# தேவை

வாகனம் ஓட்டக்கூடிய சாரதி தேவை.

தொடர்பு:
**சிறீ அமலா ஜுவலர்ஸ்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/22426)

## எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

பிரபுதேவாவின்
- **ஒன் டூ திறி**

விக்ரம் நடித்த
- **விக்கி**

(பிரதிகள் உடன்பெறலாம்.)

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (C/22429)

## யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

B... B.COM } PART I
D.C.M
G.A.Q
1st. IV. COM
ஆரம்பம்
08 - 06 -02
சனி 1.00 மணி
பொருளியல் 2003
S.வரதராஜன்


# மரண அறிவித்தல்

## திருமதி சதாசிவம் சிவபாக்கியம்

(செல்வமணி)

அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதாசிவம் சிவபாக்கியம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் (தங்கராசா) அன்பு மனைவியும் சிவஞானசுந்தரம் (கொழும்பு), கானமூர்த்தி (லண்டன்), ஜெயச்சந்திரன் (இசை ஆசிரியர்), வனிதாமணி (கொழும்பு), இராஜேந்திரன் (ஜேர்மனி), விஜயசிறி (லண்டன்), ஜெயசிறி (பிரான்ஸ்), கலாவதி (லண்டன்), மதிமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41 A, சிவப்பிரகாசம் றோட்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (4609)

தகவல்:
ஜெயச்சந்திரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேச[illegible]) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.